# கண்ணம்மா

2



தி. உதயசூரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணம்மா

☆

தீ. உதயசூரியன்

☆

தமிழோசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை,
நானாக்கி
என்னிடத்திலே தரும்
கண்ணகி ஆச்சியின்
காலடிக்கே
நானும்
எனது நூலும்
காணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணம்மா

வெளியீடு

தமிழோசை
இலக்கிய அமைப்பு

முதற் பதிப்பு

தி. ஆ. 2033. பங்குனி. 2002

அச்சுப்பதிப்பு

வவுனியா வடக்கு ப. நோ. கூ. சங்கப் பதிப்பகம்,
புதுக்குடியிருப்பு

பதிப்புரிமை

இ. உதயசூரியன்
புன்னை நீராவி வித்தியாலயம்,
தருமபுரம்,
பரந்தன்,
கிளிநொச்சி.

விலை 100/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணம்மா

தி. உதயசூரியன்

தமிழோசை

இலக்கிய அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

எமது பாடசாலை ஆசிரியர் திரு. தி. உதயசூரியன் அவர்கள் கவிதைத் துறையில் – தமிழ் இலக்கியத்துறையில் துல்லியமான அறிவு கொண்டு விளங்குபவர்.

அவர் பாடசாலையில் மாணவர்களை வழிப்படுத்தியும், நெறிப்படுத்தியும் ஆக்கங்களை மேடை ஏற்றும் போதும் நான் இதனை அவதானித்து வருகிறேன்.

இன்று அவை வளர்ச்சி பெற்று ''கண்ணம்மா'' என்ற நூல் வடிவம் பெற்று இருப்பதைக் கண்டு மகிழ்வடைகின்றேன்.

எமது சமூகம் எதிர்பார்க்கின்ற அல்லது சமூகத்திற்கு தேவைப்படுகின்ற விடயங்களை அவ்வப்போது கவிதைகளாகப் புனைந்தும் நூல் வடிவில் ஆக்கியும் தேசத்தின் தேவையை உணர வைக்கும் நூலாசிரியர் மேன்மேலும் இந்தத் துறையில் வளர்ந்து எமது சமூகத்திற்கு ஆல விருட்சமாக நிழல் கொடுக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

வாழ்க கண்ணம்மா
வளர்க நூலாசிரியர்
வெல்க அவரது பேனா

*நன்றி*

ஆ. பே. சச்சிதானந்தசுந்தரம்
அதிபர்
கிளி/புன்னை நீராவி வித்தியாலயம்
தருமபுரம்
பரந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்புரை

இந்த நூல் சாதாரண வாசகர்களுக்கு சிறிது புதுமையாகவும், ஓரளவு புதிராகவும் இருக்கும்.

இது கவிதைகள், கட்டுரைகள், கடிதங்களை உள்ளடக்கிய ஒரு நூலாகும்.

இந்நூலின் கதை நாயகியான கண்ணம்மா உதயசூரியனின் ஒரு புனைவா?

உதயசூரியன் தான் இழந்த ஒருத்தியைத் தேடும் தேடலா?

அவரது இலக்கியக் கனவா?

அவர் சந்திக்கும் அடிமட்ட மக்களின் வாழ்வின் ஒரு பதிவா?

மேற்கூறியவற்றை யெல்லாம் உள்ளடக்கியதாகவே பதிவிருக்கும் என எனக்குத் தோன்றுகின்றது.

பல சந்தர்ப்பங்களில் அவர் தன்னிலை மறந்து அவளுள் மறைந்து விடுவது அவள் உண்மையில் வாழ்பவள் என்பதை பூடகமாகத் தெரிவிக்கின்றது. அவளுக்கூடாக அவர் ஏனைய வற்றை நிறைவு செய்கின்றார் என்பதே உண்மையாகும்.

உண்மை எதுவாக இருப்பினும் இந்த நூலானது ஆழமாகப் புண்பட்ட ஓர் இதயத்தின் குரல், புண்பட்ட மக்களின் குரல் என்பதில் ஐயமில்லை.

இந்த நூல் ஈண்டு வாழ்ந்த கண்ணம்மா இடம் பெயர்ந்து வறுமையில் வாடுவதையும் மூன்று குழந்தைகளை இழப்பதையும், ஈற்றில் அரச உத்தியோகம் என்னும் நிவாரணம் பெற்று நிம்மதிப் பெருமூச்சு விடுவதையுமே வெளிப்படையாகப் பேசுகின்றது. அதேவேளை நான் மேலே கூறியவற்றை அழகாக எடுத்தும் பேசுகின்றது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் வரும் கவிதைகளை, கவிதைகள் என ஏற்க என்னால் முடியவில்லை கவிதைகள் குறைந்தது ஓசை நயத்தையாவது கொண்டிருக்க வேண்டுமென்பது எனது தாழ்மையான கருத்து: காசி ஆனந்தன் அவர்கள் இவற்றை நறுக்குகள் என அழைக்கலாம் என்பார். இருந்த போதும் நடைமுறையில் இவை கவிதைகள் என்றே அழைக்கப்படுவதைக் கருத்திற் கொண்டு இவை பற்றிப் பேசுகையில் கவிதைகள் என்றே குறிப்பிடுகின்றேன்.

இந்த நூலின் கவிதைகள் இக்கால அவல வாழ்வை நன்கு பதிவு செய்வதில் வெற்றி பெற்றுள்ளன. அதே வேளை இந்நூலில் இடம்பெறும் மற்றைய விடயங்கள் அழமற்றவையாகத் தெரிகின்றன. அத்தோடு தொடர்பற்று இருப்பது போலவும் தெரிகிறது.

கண்ணம்மாவின் குழந்தை - 1 என்ற கவிதை தீயைப் பெற - வெளிச்சம் - ஆதிகாலத்தைப்போல எவ்வளவு சிக்கல் பட வேண்டியிருக்கின்றது. என்பதை வறுமையோடு, பொருளாதாரத் தடையோடு, வாழ்வின் துன்பத்தோடு இணைத்து அழகாகப் பேசுகின்றது.

விழியிரண்டிருந்த போதும்
ஒளியிழந்த வீட்டினுள்
கடிவாளையைக் கண்டு கொள்ள முடியாது
அடுப்பை நன்றாய் ஊதுகிறாள் தாய்.

அடுத்தடுத்த வீடுகளிலும்
கட்டை மூட்டுவதுதான் வழக்கம்
அங்கிருந்தும் வெளிச்சம்
பெறமுடியாது.

இரண்டு யானைத் தீப்பெட்டிகள்
இல்லாது போன போதும்
இருக்கின்ற தீப்பெட்டிகள்
யானை விலையைத்
தமதாக்கிக் கொண்டதால்
தீக்கடை கோல் கண்டு பிடித்த
காலத்திற்கே திருப்பி விட்ட
நம் வாழ்வை எண்ணி
நொந்தவாறே
அடுப்பை ஊதுகின்றாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே பொதுவாக எல்லாக்கவிதைகளும் எவ்வித பூடக மொழிகளுமின்றி சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளன. அதில் பெருவெற்றியையும் பெற்றுள்ளன.

உதயசூரியனுக்கு தற்போதய முறைசார் கல்வியின் நடைமுறை மீது இருக்கும் கோவம் பல இடங்களில் வெளிப்படுகின்றது. அவர் ஒரு ஆசிரியராக இருப்பதால் அவற்றை அவரது பட்டறிவுக்கூடாகப் பதிவு செய்கின்றார்.

முறைசார் கல்வியின் குறைபாடுகளை வெளிப்படுத்தமுனையும் கண்ணம்மா ''இசை ஒழுங்கு நியதிக்குட்பட்டது. ஒழுங்கு நியதிக்குட்பட்ட இசையை கற்கின்றவர்கள் தமது வாழ்விலும் ஒழுங்காக நடந்து கொள்வார்கள்'' எனப் பேசும் போது முறைசார் கல்வியின் ஒரு கருத்தையே பிரதிபலிக்கின்றார். இக்கருத்தோடு மெய்மையைக் காணும் எவரும் உடன்பாடுகாணமாட்டார்கள். இவ்வாறு பல சிக்கல்களை உருவாக்கும் கருத்துக்களை இந்நூல் முன் வைக்கிறது.

இது உதயசூரியனின் முதல் நூல் முழுமையாக நூலை வாசிக்கையில் அதிற் காணப்படும் குறைகளுக்கு அப்பால் ஒரு நல்ல நூலை வாசித்த மனநிறைவைத் தருகின்றது. சமகாலத்தில் வந்த நூல்களிலும் இது சற்று வேறுபட்டது இது பேசும் களமும் வேறு

உதயசூரியன் க. சி. குலரத்தினம் அவர்களிடம் மிகவும் மரியாதை கொண்ட ஒரு மாணவன்.

இந்த நூலை வாசிக்கையில் ''அட போடா நான் இந்த பனை வடலிக்குள் இருந்து தாண்டா படித்தனான். எங்கும் பட்டம் பெறவில்லை. எனக்கூறி பலத்துச்சிரிக்கும் பேரறிஞரான எனது பாட்டனின் – சூரியனின் குருவின் – சிரிப்பொலி காதில் ஒலிப்பதைக் கேட்க முடிகின்றது.

''கவிஞனுடைய மதிப்பை நிதானிப்பதற்கரிய உரைகள் அவன் உருவாக்கும் மனப்பான்மையே''

இவ்வகையில் உதயசூரியன் என்ற கவிஞர் மதிப்புக்குரியவரே. அவரது இந்த நூலும் மதிப்புக்குரியதே.

யோகரத்தினம் செகதீசுவரி யோகி
8-3-2002 தருமபுரம், பரந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணம்மாவின் குழந்தைகள் கவிதைகள் பிறந்த கதை

"பூ" ரீச்சர் என்று நாங்கள் கூப்பிடுகின்ற எங்கட வகுப்பாசிரியை திருமதி பூவிலிங்கம் அவர்கள் தான் கண்ணம்மாவிற்கு நேரடியாக என்னை அறிமுகஞ் செய்து வைத்தவர். அப்போது நான் எழுதி வைத்திருந்த கவிதைகளை ஆர்வத்துடன் படித்துப் பார்த்த கண்ணம்மா வேண்டிய திருத்தங்களைச் செய்து தந்ததுடன் அடுத்ததாகத் தான் பங்கேற்கவிருந்த கவிதை அரங்கில் கவிதை வாசிக்க எனக்கு வாய்ப்பளித்தார். எங்களூர்க் கண்ணகை அம்மன் கோவில் முன்றலில் நடைபெற்ற அந்தக் கவிதை அரங்கே நான் பங்கேற்ற முதலாவது கவிதை அரங்காகும்.

கண்ணம்மாவின் தந்தையார் ஒரு பேராசிரியர். இந்திய அறிஞர்களே வியக்குமளவிற்கு மணிமேகலையின் சமயக் கணக்கர் தம் திறங்கேட்ட காதைக்கு விளக்கவுரை எழுதி பல்வேறு சமய உண்மைகளை வெளிக்கொணர்ந்தவர். ''அவனன்றி ஓர் அணுவும் அசையாது'' என்று பெரும்பாலான சமயங்கள் கூறுகின்ற போதிலும் பேராசிரியர் இரட்டைக் காப்பியங்களும் சமண பௌத்த சமயங்களும் வலியுறுத்துகின்ற ஊழ்வினை என்பதிலேயே அதிகம் ஈடுபாடு கொண்டவர்.

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்'' என்ற திருக்குறளை அதிகம் வலியுறுத்துபவர் பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவாயினும் அவரவர் வினைப்பயனின் படிதான் நடக்கும் தலைவிதி அல்லாத ஒன்றை ஒருவர் மற்றொருவர் மீது திணிக்க முடியாது தவப்பயன் காரணமாக ஒருவருக்கு வாய்த்ததொன்றை மற்றொருவர் பறிக்க முடியாது.

செய்த தவப்பயன் காரணமாகவே அறிவிலே தெளிவு ஏற்படுகிறது. அறிவு தெளிவடைகின்றபோது செயல் மீட்சி பெறுகிறது. என்பதை விளங்கிக் கொண்டதாலேயே அதாவது ஊழ்வினையெனவொன்று இல்லையெனில் ''வார்த்தை தவறிவிட்டாய் கண்ணம்மா'' என்று பாரதி பாடியிருக்க மாட்டான். பாரதியின் வாழ்வியல் அனுபவங்கள் அவனை இந்த முடிவுக்கு வரச்செய்தன. என்பது பேராசிரியருடைய கருத்து.

வினைப்பயனாக அமைந்த வாழ்வுக்கும் அவ்வாறு அமையாத வாழ்வுக்கும் பேராசிரியர் தருகின்ற விளக்கம் சிந்திக்கத்தக்கது.

புத்த பகவானின் துறவு அவரது வினைப்பயனாக் அமைந்தது அவர் துறவியானது முதல் சமாதியடைந்தது வரை அவர் மனதில் எவ்வித தடுமாற்றமும் ஏற்படவில்லை. அவர் மனம் கலங்கவில்லை. கழிவிரக்கப்படவில்லை.

ஆனால் மணிமேகலையின் துறவு தலைவிதிப்படி அமையாத ஒன்று. இது சூழ்நிலை நிர்ப்பந்தங்களாலும் தாய் மாதவியின் விருப்பத்தினாலும் சமயக் கணக்கர் மற்றும் மணிமேகலா என்ற தெய்வத்தின் உதவியினாலும் அமைந்தது. அதனாலேயே உதயகுமாரனை வாழவைக்கவோ தனது கண்ணீரை வெல்லவோ மணிமேகலையால் முடியவில்லை என்கிறார் பேராசிரியர்.

ஒருநாள் காலை வெளியே செல்ல ஆயத்தமான பேராசிரியர் முதல் நாள் இரவு சைக்கிள் சிற்றுக்கும் காரிலுக்குமிடையே நூலோடிய சிலந்தி வலை பின்னி நிம்மதியாக இருப்பதைக் கண்டார்.

தனது சொந்தச் சைக்கிள் என்றாலும் அது தற்போது சிலந்தியின் வாழ்விடம். ஆதலால் அதனைக் குடியழித்துக் கலைத்தல் தருமத்திற்கு விரோதமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கருதிய பேராசிரியர் பலநாட்களாகச் கால் நடையா கவே சென்று தனது அலுவல்களைக் கவனித்து வந்தார்.

பேராசிரியர் ஆசையாக வளர்த்த கப்பல் வாழை, குலை ஈன்று சிலநாட்கள் சென்ற பின்னர் அதற்குள் அணிற்பிள்ளை கூடுகட்டிக் குஞ்சு பொரித்து பாலூட்டி பராமரித்து வரத் தொடங்கியது. அணிற்குஞ்சு வளர்ந்து கூட்டைவிட்டுச் செல்ல முன்னரே குலை நன்றாக முற்றி விட்டது. அணிற்பிள்ளையின் குடும்பத்தைக் கலைக்கக் கூடாது என குலையை வெட்டாது விட்ட பேராசிரியர் ஒவ்வொரு காயாகப் பழுக்கப் பழுக்க அணிற்பிள்ளைகள் கள் அவற்றை உணவாக உட்கொள்வதைப் பார்த்து உதட்டுக்குள் புன்னகைப்பார். அது தெய்வீகச் சிரிப்பு.

இத்தகைய இயல்பு வாய்ந்த பேராசிரியர் நம் மீது காட்டிய அன்பு சாதாரணமானதல்ல. பேராசிரியர் மீது பட்டுவந்த காற்று என்னையும் தொட்டுச் சென்றதா லேயே என்னால் இதனை எழுத முடிகிறது என்று நான் நம்புகிறேன்.

நமது வாழ்விலும் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் வாழ் விலும் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு அடி ஆதாரமாக இருப்பது என்ன? என்று நான் துருவித் துருவிக் கேட்கும் கேள்விகளுக்குப் பேராசிரியர் மனஞ்சலிக்காமல் பதில் சொல்வார். எங்கிருந்தெல்லாம் ஆதாரம் காட்ட முடி யுமோ அங்கிருந்தெல்லாம் ஆதாரம் தருவார். அரிஸ்ரோட் டில் முதல் ஒளவையார் வரை பேராசிரியர் நாவிலே ஏறி நின்று எனக்கு விளக்கம் தருவார்கள்.

இருந்தபோதிலும் இங்கு வந்த நாள் முதலாக எனது நெஞ்சிலிருந்து வழிந்தோடத் தொடங்கிய ரத்தம் பேரா சிரியர் தரும் விளக்கங்களுக்கு அப்பாலும் ஏதோவொன்று இருப்பதாகவும் அதனைத் தேடிக் கண்டு கொள்ளுமாறும் என்னைத் துன்புறுத்தத் தொடங்கியது.

இதனிடையே சூரியக்கதிர் - 2, 3 நடவடிக்கைகள் பேராசிரியர் குடும்பத்திற்கும் எனக்குமிடையேயான உறவை முற்றாகவே அறுத்து விட்டன என்னால் இயன்ற வரை முயன்றும் பேராசிரியர் பற்றியோ மகள் கண்ணம்மா பற்றியோ அறிந்துகொள்ள முடியவில்லை இந்நிலையில் தான் அகதி, அநாதை என்ற வார்த்தைகளின் மெய்யான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளர்த்தம் எனக்குப் புலப்பட்டலாயின. கூடவே மனிதன் சூழ்நிலைக் கைதி என்று சொல்லப்படுவதை நடைமுறையில் உணர்ந்துகொள்ளவும் தலைப்பட்டேன்.

தற்போது நான் கற்பிக்கின்ற பாடசாலைப் பிள்ளைகளுக்கு,

''அம்மா காலை விட்டிலே
ஆக்கித் தந்தா பாற்சோறு
அள்ளி அள்ளி சாப்பிட
ஆகா ஆகா நல்ல ருசி''

என்ற பாடலை நான் சொல்லிக் கொடுக்க ஒரு பிள்ளை வீட்டுக்குப்போய் தன் தாய்க்கு அந்தப் பாடலைப் பாடிக் காட்ட அந்தத் தாய் மறுநாள் என்னைத் தேடி பள்ளிக் கூடம் வந்தார். நான் சொல்லிக் கொடுத்த அந்தப் பாடலை யாழ்ப்பாணத்தில் எனக்குச் சொல்லித் தந்தவர் தான் அந்தத் தாய். அது நமது கண்ணம்மாவே.

ஆரம்பக் கல்வி ஆசிரியர் பயிற்சிச் செயலமர்வொன்றின் போது இராமநாதன் அக்கடமி போதானாசிரியை அன்று வரமுடியாத காரணத்தால் இசைத்துறையில் திறமைமிக்க தனது மாணவியான கண்ணம்மாவை தனக்குப் பதிலாக அனுப்பியிருந்தார். அங்கு வந்த கண்ணம்மா தான் ''அம்மா காலை வீட்டிலே'' என்ற பாடலை எங்களுக்குச் சொல்லித் தந்தவர்.

பாற்சோற்றல்ல பழஞ்சோறு, கூட பிள்ளைகளுக்கு கொடுக்க முடியாது அந்தர்த்த அகதி வாழ்வின் தொண்ணூறு வீதமான காலைப் பொழுதுகளில் யாழ்ப்பாணத்தில் என்றால் பனங்கொட்டையாவது சூப்பக் கொடுத்து பிள்ளைகளை பள்ளிக்கூடம் விடலாம் என்று அங்கலாய்ப்பதாக என்னிடம் கூறினார் கண்ணம்மா.

பற்றாக்குறைகளும் வறுமையும் ஆக்கிரமித்து சோகத்திரை வாழ்வை மூடியுள்ளபோதிலும் இதயத்தில் எவ்வித தடுமாற்றமும் இல்லாமல் நாளைப் பொழுது மீதான நம்பிக்கையோடு வாழும் கண்ணம்மாவை மறுபடி சந்தித்த நிகழ்வை நான் எனது மறு பிறப்பாகவே உணருகின்றேன்.

கண்ணம்மாவின் ஒரு மகளின் பெயர் மணிமேகலை; தமிழோசை அமர்வுகளை ஒழுங்கமைத்தபோது இவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையாற்றல் இருப்பதை நான் இனங்கண்டு கொண்டேன். எனது ''பரந்தன் வெளியில் ஒரு பனைமரம்'' என்ற கவிதையை வாசித்துக் காட்டுமாறு அடிக்கடி என்னிடம் கேட்பார். நல்ல கெட்டிக்காரி, இவர் எழுதிய பிள்ளையாரை வேண்டுதல் என்ற கவிதை இந்த நூலில் முதலாவதாகவும், அதனை அடுத்து இவர் தனது உறுப்பெழுத்துக் கொப்பியில் எழுதி வைத்திருந்த பாடல் வரிகள் சிலவும் கண்ணம்மா மாணவியாக இருந்து ஆசிரியையாகவுள்ள இன்றைய நாள்வரை எழுதிய படைப்புகள், குறிப்புக்கள், பதிவுகள், கடிதங்கள் என்பனவும் ''கண்ணம்மாவின் குழந்தைகள்'' என்ற தொடரில் பத்துக் கவிதைகளும் கண்ணம்மாவின் மகளுக்குப் பிடித்தமான எனது பரந்தன் வெளியில் ஒரு பனைமரம் என்ற கவிதையும் மணிமேகலையின் கைறின் குரலும் இடம் பெற்றுள்ளன.

05. 07. 2001 அன்று கண்ணம்மாவின் குழந்தைகள் என்ற இந்தக் கவிதைத்தொகுதியின் தட்டச்சுப் பிரதியினைத் திறனாய்வு செய்த நமது மாணவன் சசிகரன் இந்த நூலுக்கு கண்ணம்மாவின் குழந்தைகள் என்பதற்குப் பதிலாக ''தமிழனின் தலைவிதி'' என்று பெயரிட்டால் பொருத்தமாக இருக்கும் என்று கருத்துரைத்தார். இது கண்ணம்மாவின் தந்தையாரது கருத்துடன் ஒத்துப் போகக்கூடியதுதான். ஆனாலும் இதனை ஏற்றுக்கொள்ள நடைமுறை அனுபவங்கள் இடந்தரவில்லை. தலைவிதி என்பதன் அடிப்படையிற் தான்.

வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி
பெற்றவர்கள் பட்ட கடன் பிள்ளைகளைச் சேருமடி

என்ற கருத்து உருவாக்கியிருக்க வேண்டும்.

கண்ணமாவினைப் பெற்றவரான பேராசிரியர் கடன் கொடுத்தவரே தவிர கடன் வாங்கியவர் அல்ல. அப்படியிருந்தும் அவரது ஒரேயொரு மகளும் பேரப் பிள்ளைகளும் துன்புறுவது தலைவிதிப்படிதான் என்பதை ஏற்புடைய நியாயமாக நான் கருதவில்லை.

பேராசிரியர் நன்கு முற்றிப் பழுத்த கப்பல் வாழைக் குலையை அணில் பிள்ளைகள் உண்பதைப் பார்த்து ரசித்ததையும் அவரது பேரப் பிள்ளை பசியாறுவதற்காக நீரின்றி வாடி முறிந்து விழுந்த இறப்பர்க் கதலிப் பிஞ்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுக்கும்வரை காத்திருப்பதையும் காணும் போது எல்லாம் தலைவிதிப்படி தான் என்பதற்கு அப்பாலும் ஏதோ வொன்று இருக்கிறது என்ற எண்ணம் எழவே செய்கிறது.

தலைவிதி இல்லை எனில் அதற்கு அப்பால் இருப்பது என்ன?

சூரியன் வரவு கண்டு தாமரை மலர்வதும், சந்திரன் வரவு கண்டு அல்லி பூப்பதுவும் கிரணங்களின் ஈர்ப்பினால்-அவ்வவற்றின் விதிப்படி தான் என்பதை அறிவுடையோர் ஏற்றுக் கொள்வர். ஆனால் தாமரை-அல்லி பூக்கள் மலருகின்ற குளத்தில் கிபிர் வந்து குண்டுபோடாது இருக்கின்ற வரையிலேயே தத்தமது விதிப்படி மலரவும் வாடவும் பூக்களால் முடியும். காட்டு மல்லிகை ஆயினும் அதனருகே இளைமோர் குண்டு பொருத்தாத வரையிலேயே அதனால் தன் இயல்பிலே பூக்க முடியும்.

மானிடப் பூச்சிகள் தம் இயல்பிலே மாறுபடுகின்ற போது சுய இலாபம் கருதி சக மனிதர்களது உணர்வுகளுக்கு அவர்களது கௌரவத்திற்கு மதிப்புக் கொடுக்காது அவர்களை வெறும் சடப் பொருளாக - பணயப் பொருளாக மட்டுங் கருதி காய் நகர்த்துகின்ற போது,

ஆட்சியாளர் சூதாட்ட அரசியல் நடத்த முற்படுகின்ற போது, அதர்மத்தின் வழிச் செல்லுகின்ற போது போர் தொடுத்து ஊரழிக்கின்ற போது உலகிலுள்ள அனைத்துமே தமியல்பில் மாறுபடுகின்றன இத்தகைய சூதாட்டத்தினைத் துரியோதனன் விரும்பிப் பிடிவாதம் செய்ததால் அவனது தந்தை வேறு வழியின்றி அதற்கு இணங்கியதைப் பாண்டவருக்கு அறிவிக்குமாறு சொல்ல,

போச்சுது!
போச்சுது பாரத நாடு!
போச்சுது நல்லறம்;
போச்சுது வேதம்
ஆச்சரியக் கொடுங் கோலங்கள் காண்போம்.
ஐய இதனைத் தடுத்தல் அரிதோ?

என்று விதுரன் வாயால் அவலக்குரல் எழுப்புகின்றான் பாரதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் தெரியவில்லை தமிழகக் கவிஞன் என்று நினைக்கின்றேன்;

"தற்கொலை செய்யலாம்
என்று விசம் குடிதேன்.
ஆனால் பிழைத்துக்கொண்டேன்"
அதிலும் கலப்படம்

என்று எழுதியிருப்பதும் லாபம் கருதிய சூதாட்டத்தின் படிப்பினைதான் அதாவது சமுதாயம் ஒத்துழைத்தால் மட்டுமே தற்கொலை செய்வதற்குக் கூட நமக்குள்ள உரிமையை நிலைநாட்ட முடியும்.

இத்தகைய அனுபவங்களே மனிதனது சுதந்திரத்திற்கும் அவனது தலைவிதிக்குமிடையேயுள்ள சமாந்தரத் தொடர்பை உணரச் செய்தன. தலைவிதி, சுதந்திரம் என்ற தண்டவாளங்கள் சரியாக அமையும் போதே மனிதத் தொடர் வண்டி சரியான பாதையில் நகர முடியும் இதில் ஏதேனுமொன்று ஊறுபடுமனின் மற்றவை எல்லாமே பயனற்றுப் போய் விடுகின்றன.

அதன் மெய்யான அர்த்தத்திற் சுதந்திரம் நிலவுகின்ற தேசத்திற் தான் மக்கள் தத்தம் விதிப்படி வாழ முடியும். காலையிற் பூக்கள் மலர்வதையும் மாலையிற் கடற்கரைக் காட்சியையும் ரசிக்க முடியும் பேராசிரியர், மகள் கண்ணம்மா ஆகியோரது வாழ்க்கை அர்த்தம் பெறும்.

❋

அறிஞர் க. சி. குலரத்தினம் ஐயா அவர்கள் 1994 இல் காலமாகி விட்டார். எனக்கு ஏடு தொடக்கி என் கல்வியுலகைத் திறந்து வைத்தவர் ஐயா அவர்கள். அவர்களின் அன்புப் பேரன் – எனது அன்புக்குரிய யோகி அண்ணா, எனது நூலை மதிப்பிட வேண்டுமென விரும்பிக் கேட்டேன். எனது அடைவு மட்டம் என்ன என்பதை யோகி அண்ணையின் உரையை வாசிக்கும்போது நீங்கள் அறிவீர்கள்.

இந்த நூலின் வெளியீட்டுக்கு முன்னின்று பாடுபட்டவர் என் உடன் பிறவாச் சகோதரன் சு. அமலகுமார். அவர் முயற்சி எடுக்காவிடில் கண்ணம்மாவின் வருகை மேலும் தாமதமாகியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அச்சாகும்போது தகுந்த ஆலோசனை தந்தவர் இமயவன் ஐயா அவர்கள்.

கிளிநொச்சி மாவட்டம் புன்னை நீராவி வித்தியாலய அதிபர் திரு பே. சச்சிதானந்த சுந்தரம் அவர்கள் எனது கவிதைகள் சிலவற்றையேனும் மக்கள் முன் வைக்க வேண்டுமென விரும்பியவர். அதற்கிணங்கவே கண்ணம்மாவின் குழந்தைகளை தட்டெழுத்துப் பிரதியாக மக்கள் முன் வைத்தோம்.

தட்டெழுத்துச் செய்தவர் திருமதி தருமராணி விஜயகுமார் அவர்கள்.

நம்மைக் கடந்து போய்க்கொண்டிருக்கிற நமது காலத்தோடு இரவு பகலாக போராடி "சீவன் போகுது பதளிவு கிள்ளிப் பருக்கு என்று சேடம் இழுத்துக் கொண்டிருக்கும் அச்சு சாதனங்களில் கண்ணம்மாவை உருவாக்கிய சாவித்திரிகள் வவுனியா வடக்கு ப. நோ. கூ. சங்கப் பணியாளர்கள் அவ் வேளைகளில் என்னைக் கவனித்தவர் பொழிலன், கஜன் ஆகியோர் சரவை பார்த்து உதவியவர் க. தே. புரட்சிதாசன் இவர்கள் அனைவருக்கும் எனது இதயங்கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

☆

யாழ்ப்பாணத்தில் நடமாடும் பல்கலைக்கழகம் என்று கற்றவர்கள் காமுறுகின்ற பேராசான் ஆ. சபாரத்தினம் அவர்களது பாதங்களை என் கண்களிலொற்றிக் கொள்கின்றேன்.

தமிழிலக்கணத்தை முறையாகத் கற்றுத் தந்து மொழித் தாய்க்கு நோகாது அதை மீறுவதையும் அங்கீகரித்தவர் மதிப்புக்குரிய சொக்கன் ஐயா அவர்கள்.

நண்பர் அ. யேசுராசா அவர்கள் எனது கவிதைகளை களை அங்கீகரித்து தன்னுடைய "கவிதை" சஞ்சிகையில் வெளியிட்டவர். மீண்டும் அவரோடு கைகோர்த்துக் கொள்ளக் காலம் கனிந்திருப்பதை எண்ணி மகிழ்கின்றேன்.

இந்த நூலைப் பற்றி என்னுடைய வாக்கு மூலமாக ஏதேனும் சொல்வதாயின், உங்களிடம் – நான் வாழ்கின்ற சமூகத்திடம் நான் கற்றுக் கொண்ட கடினமான பாடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவான வார்த்தைகளால் உங்களுக்கே திருப்பித் தந்திருக்கிறேன்.

வேறு வார்த்தைகளிற் சொல்வதானால் நான் வாழ்கின்ற சமுதாயமே கண்ணம்மாவை உருவாக்கியது. இந்தச் சமுதாயத்தின் கருப்பைக்குள்ளேயே கண்ணம்மாவின் குழந்தைகளும் உருவானார்கள்.

என்னுடன் ஒத்துழைக்க மறுத்த எனது காலத்தோடு போராடி கண்ணம்மாவை உங்கள் முன் கொண்டு வந்திருக்கிறேன். கண்ணம்மாவின் குழந்தைகள் உங்கள் நரம்புகளை வருடும் போது எனது முயற்சியில் நான் வெற்றிபெற்று விட்டேன் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

''பாஞ்சாலி சபதம்'' எழுதுமாறு பாரதியை ஊக்குவித்த அன்னை பராசக்தியே கண்ணம்மாவை உங்கள் முன் வைக்குமாறு என்னையும் ஊக்குவித்தாள். ஆகலின் நான் எனது என்பதெல்லாம் ஆழ்ந்த பொருளேதுமற்ற வெறும் அற்ப வார்த்தைகளே,

தூய,
உருப்பளிங்கு போல்வாள்
என்னுள்ளத்தினுள்ளே
இருப்பாள்
இங்கு
வாராது இடர்.

ஊரெழு,
வலிகாமம் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
12-3-2002

அன்புள்ள
தி. உதயசூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையாரை வேண்டுதல்

பிள்ளையாரே,
என்
அம்மாவுக்கு
ரீச்சர் வேலை
கிடைக்கும் வரை
பசி என் வயிற்றைத்
தீண்டா திருக்கட்டும்.

ஆசையோடு
சாக்கிற் போட்டுக்
கட்டித் தூக்கிய
வாழைக் குலை பழுக்கும் வரை
குண்டுகள் வந்து
வீட்டுக் கூரை மேல்
விழா திருக்கட்டும்.

வீட்டுப் பாடம்
சரியாய்ச் செய்து
ரீச்சரிடம் நாளை
மிக நன்று
வாங்க வேண்டும்
கணக்குச் செய்யும் வரை
நிலவின்று மறையா திருக்கட்டும்.

அடுத்த வாரம்
வெள்ளி விழாக் காணும்
எமது
பள்ளிக் கூடம்
அது வரை
இடம் பெயராதிருக் கட்டும்,

நாங்கள் பட்ட
துன்பம்
இந்தப் பூமியில்
எவருமே
இனிப் படா திருக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்றின் குரல்

''கன்றின் குரலும் கன்னித் தமிழும்
சொல்லும் வார்த்தை அம்மா அம்மா
கருணை தேடி அலையும் உலகில்
உருளும் வார்த்தை அம்மா அம்மா
எந்த மனதில் பாசம் உண்டோ
அந்த மனதைக் கேட்பேன் ஒன்று
எனக்கு நீயும் பதிலைச் சொன்னால்
அதுவே நன்று என்றும் என்றும்.

நான் தாயை இழந்ததொரு பசுக்கன்று. நேற்றுவரை எனது தாயின் அரவணைப்பில் நான் இருந்தேன் ஆனால் இன்றோ, உங்களில் ஒருவர் எனது தாயைக்கொன்று உங்களிற் பல்பேசின் பல்லுக்கு இரை கொடுத்துவிட்டார்.

அம்மா தாய்மார்களே,

எனது தாய் நீங்கள் போட்ட புல்லையே சாப்பிட்டாள். புல்லைச் சாப்பிட எனக்கும் பழக்கினாள். பால் மணம் மாறாத எனது கழுத்திலே கயிற்றைப் போட்டு எனது தாயின் மடி என் வாய்க்கு எட்டாத தூரத்தில் இழுத்துக் கட்டினீர்கள். புல்லுப் போட்ட கூலியாக என் தாயின் மடியிலூறிய பாலைக் கறந்து உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்தீர்கள். நீங்களும் குடித்தீர்கள்;

அம்மா, தாய்மார்களே, தமிழர்களே, அம்மா அம்மா என்றுதான் எந்த இனத்தவர்களையும் நாங்கள் அழைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக்காறியைக் கண்டு விட்டால் அவளை நாங்கள் மதர் என்றோ மடம் என்றோ என்றழைப்பதில்லை.

அம்மா தமிழ்த் தாயே,

யாரம்மா என் தாயைக் கொன்றது.

எதற்காக அம்மா என் தாயைக் கொன்றார்கள். உங்களின் சிலபேருக்கு இறைச்சி தரவேண்டும் என்பதற்காகத் தானே,

அம்மா தமிழ்த் தாயே,

கோமாதா என்று எனக்கு பூசை செய்தவள் நீதானே. பொங்கிப் படைத்தவளும் நீதானே உன்னை ஒன்று கேட்கிறேன்.

உங்களில் யார் பெற்ற பிள்ளையானாலும் வித்தியாசமின்றி எனது தாய் பால் கொடுப்பாள்.

தாயிழந்த நான் பசியால் துடிக்கிறேன்

உங்களில் எவளாவது ஒரு தாய், எனக்குப் பால் தருவீர்களா?

பதில் சொல்லு தாயே!

---

அம்மா கைகோர்த்து
நடை பழகிய ஞாபகமே
தனியே நடை பயின்று
நான் தொலைந்தது ஞாபகமே
புத்தகம் நடுவே மயிலிறகை
நான் வளர்த்தது ஞாபகமே
சின்னக் குழந்தையில்
சேலை கட்டும் ஞாபகம்
வெட்கம் வந்ததும் முகத்தை
மூடும் ஞாபகம்

ஞாபகங்கள் மழையாகும்
ஞாபகங்கள் குடையாகும்
ஞாபகங்கள் தீமூட்டும்
ஞாபகங்கள் நீருற்றும்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளித் துள்ளி ஓடலாம்
மான்களாக மாறலாம்
ஊர்வலங்கள் போகலாமா?
முள்ளில்லாத பூக்களில்
சுற்றுலாக்கள் போகலாம்
வண்டுபோல ஆகலாமா?

காற்றுக்குத் தூது விட்டு
கவிதைகள் பாடச் சொல்லு---

☆

அதிகாலையில் சேவலை எழுப்பி
அதைக் கூவென்று சொல்லுகிறேன்
கடிகாரத்தைச் சீக்கிரம் திருப்பி
அதன் வேகத்தை மிஞ்சுகிறேன்.

☆

அந்த விண்ணில் ஆனந்தம்
இந்த மண்ணில் ஆனந்தம்

பூமிப்பந்தை முட்டி வந்த
புல்லில் ஆனந்தம்—அட

மழையிற்கூட சாயம் போகா
வானவில் ஆநந்தம்
வாழ்வே பேரானந்தம் வாழ்வில்
நூறாநந்தம் கண்ணே – உன்
விழியால் பிறர்கழுதால்
கண்ணீரும் ஆநந்தம் ஆநந்தம்

குறிப்பு:-

☆ *கண்ணம்மா மகள் மணிமேகலை வானொலியில் கேட்டு, தனது கொப்பிகளில் எழுதி வைத்திருந்த பாடல் வரிகள் இவை.*

☆ *நூலின் 36, 40, 42 ஆம் பக்கங்களில் சுட்டப்பட்டவையும் திரைப்படப் பாடல் வரிகள்.*

☆ *39 ஆம் பக்கத்தில் சுட்டப்பட்டது பாரதியின் பாடல்*

☆ *கண்ணம்மாவின் அணிந்துரை நூலில் இடம்பெறவில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணம்மாவின் குழந்தை — 1

அர்த்த சாமத்தில்
வீரிட்டழும் குழந்தையை
மார்போடணைத்த படியே
அடுப்பை ஊதுகிறாள்
கண்ணம்மா.

பாம்போ பல்லியோ
ஏதோவொன்று படுக்கையிற்
பிள்ளையைத் தீண்டியிருக்க வேண்டும்.
அம்மாவென்றே ஒருவார்த்தை
உச்சரிக்கத் தெரியாத
பச்சைக் குழந்தையின் உடலில்
எப்பகுதி கடிபட்டிருக்கும்?

விழியிரண்டிருந்த போதும்
ஒளியிழந்த வீட்டினுள்
கடிவாயைக் கண்டு கொள்ள முடியாது
அடுப்பை நன்றாய் ஊதுகிறாள் தாய்.

அடுத்தடுத்த வீடுகளிலும்
கட்டை முட்டுவதுதான் வழக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்தும் வெளிச்சம்
பெற முடியாது.

இரண்டு யானைத் தீப்பெட்டிகள்
இல்லாது போன போதும்
இருக்கின்ற தீப்பெட்டிகள்
யானை விலையைத்
தமதாக்கிக்கொண்டதால்
தீக்கடை கோல் கண்டு பிடித்த
காலத்திற்குத் திரும்பி விட்ட
நம் வாழ்வை எண்ணி
நொந்தவாறே
அடுப்பை ஊதுகிறாள் அவள்.

சிறு பொறி மெல்ல மெல்லப்
பிரகாசித்துப்
பெரு வெளிச்சமான போது
பிள்ளையின் முகம் பார்த்தாள்
கண்ணம்மா.

கடிவாயை இனிக் கண்டு
கொள்ளத் தேவையில்லை
பிள்ளை நிரந்தரமாகவே
தூங்குகின்றது.

மூட்டிய நெருப்பு நாளை
கொள்ளி வைக்க உதவும். OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணம்மாவின் குழந்தை — 2

அர்த்தசாமத்தில் எழுந்து
" அம்மா பல்லுக் கொதிக்குதணை "
என்று கால்மாறி கால்மாறித்
துள்ளித் துள்ளி அழுகின்றான்.
கண்ணம்மாவின் மகன்.

கொள்ளிக் கட்டையை
ஊதி வெளிச்சத்தை
வரவழைத்த தாய்
சிரட்டையில் உப்பை எடுத்து
குடத்தைச் சரித்தாள்.

ஓ.
ஒருதுளி நீர்தானும்
குடத்திலில்லை.

நாளை விடிந்தால்,

அடுத்தவீடு, அதற்கடுத்த வீடு
அதற்கடுத்த வீடுந்தாண்டி
அப்பாற் சென்றுதான்
நீர் கொண்டுவர முடியும்.

இப்பொழுது வாய்
கொப்பளிக்க உப்புத்தண்ணி
கொடுக்கா விட்டாலோ
புத்திரனைத் தகான்
பண்ண முடியாது.

பிள்ளையாரே,
ஆகாய கங்கையை
மீண்டும் ஒருமுறை
பூமிக்கு அனுப்பு என்றவள்
நாளை கோவிலுக்கு வைத்திருந்த
தேங்காயின் நீரைப் பக்குவமாய்
உடைத்தெடுத்து
உப்புச் சிரட்டையில்
ஊற்றிக் கொண்டாள். ○○

# கண்ணம்மாவின் குழந்தை — 3

"துப்... துப்..... துப்.....
கழிப்புக் கழிச்சுக் கிடக்கு
மூண்டு தரம் துப்படா"

பள்ளித் தோழனின்
வற்புறுத்தல்
கண்ணம்மாவின் புதல்வன்
காதுகளில் விழவில்லை.

பசித்தீயினால் புகையும் வயிறும்
சமையலுக்காய் எரியாத அடுப்பும்
அந்த நடுப் பொழுதில்
அவனைச் செவிடாக்கி விட்டன.

ஊரில்,
இறந்துபோன யாரோ ஒருவரின்
ஆவி பேயாகி
வீடு திரும்பாதிருக்க
விரட்டிய தடயம் ஒன்றாக
இளநீர்க் குரும்பை
எச்சில் சேமித்துக் கொண்டு கிடந்தது
அந்த முச்சந்தியில்.

வீடும் வயிறும்
வெறுமையாய்த் தோன்றும்
கண்ணம்மாவின் புதல்வன் நெஞ்சில்
அந்த இளநீர்க் குரும்பை
பால் வார்த்தது.

வீட்டிற்குக் கொண்டு போனால்
தங்கச்சிக்குப் பாதி, எனக்குப் பாதி
மனதிற்குள் அதைப் பாகம்
பண்ணிக் கொண்டே, தோழனைக்
காய் வெட்டிவிட்டான் அவன்.

பேய்,... பேய், என்று
விரட்டுகிறீர்களே,
இது தானய்யா
இடப்பெயர்வு. ○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணம்மாவின் குழந்தை — 4

கண்ணம்மாவின் மகள்
மணிமேகலை
ஐந்தாம் ஆண்டிற்
படிக்கும் போது
ஒரு நாள்,

விடி காலையில் எழுந்து
சோற்றுப் பானையுடன்
கறிச்சட்டியையும்
சுத்தமாகத் தேய்த்துக் கழுவுகிறாள்.

அக்காவின் செயல்
அடிவயிற்றிற் பால் வார்ப்பதாய்
உணர்ந்த
கண்ணம்மாவின் கடைக் குட்டி
''இண்டைக்கு நிவாரணம்,
இண்டைக்கு நிவாரணம்''
என்று
கைகளைத் தட்டி
துள்ளிக் குதித்து ஆரவாரிக்கிறது
பாவம்.

முற்றத்தில் வளர்ந்திருந்த
நிழல் மரவள்ளி
மரத்தடியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிப் பெருக்கிக்
கோயிலாக்கி
கழுவியெடுத்த
பானை சட்டியை
விக்கிரங்களாக அமர்த்தி
பூசை வழிபாடு செய்யுது மூத்தது.

உதென்ன வினோதமான
விளையாட்டு?

''எங்களுக்குச் சாப்பாடு
தந்தவர்கள் தெய்வமாம்.
ஓ. அதுதான் சரி

அப்படித்தான் ரீச்சர் சொன்னவா.

அதுதான்'
சோறு கறி தந்த
பானை சட்டிக்குப் பூசை செய்யிறன்.

சடார்—,சடார்....,
பதில் காதில் விழமுதலே
பக்கத்திற் கிடந்த
கட்டையால் எடுத்துப்
பானை சட்டியின்
தலையிற் போட்டான்
கண்ணம்மாவின் மூத்தவன்.

நேரத்திற்குச் சோறு தராத தெய்வம்
இருந்தாலென்ன,
இறந்தாலென்ன. OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணம்மாவின் குழந்தை — 5

நோய் வாய்ப் பட்ட
கண்ணம்மாவின் குழந்தைக்கு
காலை ஆகாரமாக
இடியப்பம் கொடுத்தால் நல்லது.

''இடியப்பம் என்றால் என்ன அம்மா''?
அனுங்கி அனுங்கிக் கேட்டது குழந்தை.

தன் இயல்பையும் மீறி பனித்த கண்களை
உள்ளங் கைகளிற்
புதைத்தாள் கண்ணம்மா.

அம்மா ஏன் அழுகிறாள்?

யாழ்ப்பாணத்தில்,
தினசரி ஒவ்வொரு கொத்து மாவில்
இடியப்பம் பிழிந்து
விருந்தினரோடு பகிர்ந்துண்ணும்
நினைவும்
மருந்துக்காகவேனும்
இன்று இடியப்பம் அவிக்க முடியாத
நிலையும்
முட்டி மோதி வழிந்த கண்ணீர்
இடியப்பவுரல் பிடித்து
காய்த்துப் போயிருந்த அவள்
உள்ளங்கைகளைக்
கழுவிச் சென்றது.

இயன்ற வரை வீடு முழுவதும்
தேடுதல் நடத்தி
பொறுக்கிச் சேர்த்த
ஒன்பது ரூபாவைக்
கையிற் கொடுத்து
இடியப்பம் வாங்கி வர
மூத்தவனைக் கடைக்கு
அனுப்பினாள் தாய்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தக் கடையில் இடியப்பம்
இரண்டு ரூபாய்
நாலுதான் வாங்கலாம்
சம்பலும் உறைப்பு
வேண்டாம்.

அடுத்த கடைக் காரனுக்கு
என்னைக் கண்டாலே பிடிக்காது
தண்ணியால் ஊற்றுவான்
அதுவும் வேண்டாம்.

கண்டாவளை அப்புவின் கடையில்
இடியப்பம் ஒரு ரூபாய்.
பார்த்துப் பாராமல்
சம்பல் சாம்பாரும் தருவார்?

''தூர மெண்டாலும்
அங்க போறது தான் நல்லது.
இடியப்பப் பாசலும் கையுமாக
வீடு திரும்பிக் கொண்டிருந்தவனது
கால்கள்
பசிக்களைப்பினால்
ஒன்றுடனொன்று பின்னுப் பட்டன.
உள்ளங் கால்களைக்
கிறவல் மண் பதம் பார்த்தது.
வீதியால் சென்ற வாகனம்
புழுதியால் அவனைக்
குளிப்பாட்டியது.
உச்சிக்கு ஏறிக் கொண்டிருந்த
சூரியன் தன் பங்கிற்கு
அவன் முகத்திற் குறிசுட்டது.

அதோ வீதியோரத்தில்
மயங்கிக் கிடக்கும்
கண்ணம்மாவின் புதல்வன்
கையிலிருந்த பாசலைக்
கௌவிக் கொண்டு போகிறது
தெரு நாய். oo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணம்மாவின் குழந்தை — 6

எங்கட ரீச்சரிட்ட
முப்பத்தஞ்சு சாறி இருக்கு?
ஒரு நாளைக்கு உடுத்த சாறியை
ரண்டு மாதத்திற்குப்
பிறகுதான் உடுப்பா.

காது கழுத்து கையெல்லாம்
நகை மினுங்கும்.
பூசுற பவுடரும் வாசம்
ரீச்சர் நல்ல வடிவு.

அம்மன் மாதிரி.

எங்களுக்குக் கோம்சயன்ஸ்
படிப்பிக்கிறவா.

தன்னை, தன் வீட்டைப்
பாதுகாத்தல், அழகுபடுத்தல்,
ஒருவருக்கு 200 கிராம்
அரிசி வீதம்
அளவுத் திட்டப்படி சமைத்துச்
சாப்பிட்டபின்
பாத்திரங்களைக் கழுவி
அந்தந்த இடத்தில் வைத்தல்
பணத்தைச் சேமித்தல்
திட்டமிட்டு முன்னேற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென
பாடக்கிட்டப்படி ரீச்சர்
படிப்பிக்கும்போது,
ரீச்சர் சொல்லுற மாதிரி
திட்டமில்லாமலே வாழ்ந்து
வறுமையில் மூழ்கியிருக்கும்
எங்கட அம்மாவை நினைக்க
எரிச்சலாக இருக்கும்.

எங்கட அம்மாவுக்கும்
ரீச்சற்ற வயது தானிருக்கும்
யாழ்ப்பாணத்தில,
ராமநாதன் கல்லூரியில
படிச்சவாவாம்
மேல் வகுப்புப் படிக்கேக்க
வெள்ளைச் சாறியிலை, அரைத்
தாவணி போட்டுக் கொண்டுதான்
பள்ளிக்கூடம் போறவாவாம்
படிக்கிற காலத்தில நல்லாக்
கவிதை எழுதுவாவாம்.

இப்ப அவவிட்ட
நல்ல சாறியெண்டு ஒண்டுமில்லை.
வீட்டில உடுக்கிற உடுப்பிலும்
தங்கச்சியின்ர
மூத்திர வெடுக்கு மணக்கும்.
சாது ஒட்டை தூர்ந்து
போகாமல் வேப்பங்குச்சி
வைச்சிருக்கிறா.
நாங்கள் வளர்ந்து உழைச்சுக்
குடுத்தால் நகை போடுவாவாம்.

செதியா நாங்கள் வளர்ந்து
அம்மாவுக்கு உழைச்சுக் குடுப்பம்?
என்ற தீர்மானத்தோடு
வீட்டுக்குச் சென்ற
கண்ணம்மாவின் புத்திரிக்கு
அம்மாவின் செயல் பிடிக்கவில்லை;
அடுப்பை மூட்டி
உலையை வைத்துவிட்டு
அன்றைக்குத் தேவையான அரிசியைப்
பேணிச் சுண்டினால்
அளந்தெடுத்தபின்
கைகளினாலும் ஒரு சிறங்கை
எடுத்துப் போட்டாள் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா நெடுகலும் உப்பிடித்தான்
அரிசி கிடந்தால்
அள்ளிப் போட்டுக் காய்ச்சுவா
சாப்பிட்ட மிச்சம்
பானைக்குள் இருக்கும்.
இரவு பத்து மணிக்குப் பிறகு தான்
சோத்துப் பானைக்குத்
தண்ணி ஊத்துவா.

யாழ்ப்பாணத்தில எண்டால்
படவஸ் போய்க்
சனநேரத்துக்குப்
பிறகுதானாம்
பானைக்குத் தண்ணி
ஊத்திறது.

" அம்மா,
உங்களுக்கென்ன மண்டைபீஸே
நிவாரண அரிசியெண்டால்
கண்டபாட்டில
அள்ளிப்போட்டு அவிக்கிறதே?
ரீச்சர் சொன்னவா.

.................................................

.................................................

.................................................

மழை விட்டதுபோல் மகளின்
சொற்பொழிவு ஓய்ந்ததும்

" அளந்து போட்டது எங்களுக்கு
அளக்காமல் போட்டது வாறவர்களுக்கு
அளக்கச் சொன்னது,
எங்கட இனத்தின்ர அடியழிக்கிற
குறுக்கு மூளை.
அள்ளிப் போட்டது பரம்பரை இதயம்"

நிதானமாகச் சொன்னாள் தாய்:

புத்தகத்தில் கற்றுக்
கொள்வதைவிட
பெற்ற தாயிடம் பரிமாறிக்
சொல்வது மேலென
உணர்ந்து கொண்ட
கண்ணம்மாவின் மகள்
கோம்சயன்ஸ் கொப்பியைக்
கிழித்துக்
குப்பைக்குள் போட்டாள். OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணம்மாவின் குழந்தை — 7

"மணிமேகலை
அழுது கொண்டிருக்கிறா ரீச்சர்"

"ஏன்"?

"புருசன்ர மாம்பழத்தைப்
பிச்சைக் காரப் பரதேசிக்குக் குடுத்த
காரைக்காலம்மையார்
எண்டு,
மேல் வகுப்பு அக்காக்கள்
பழிச்சுக் காட்டினம்
அதுக்குத் தான் அழுகிறா."

வைத்திலிங்கம் ரீச்சர் பாடு
பெரும் தர்ம சங்கடமானது.

ரீச்சர் பழக்கிய நாடகத்தில்
காரைக்காலம்மையாராக
நடித்த கண்ணம்மாவின் மகளை
ரியுசன் கிளாசில
தங்களுக்கு
வகுப்பெடுக்கிறவையைத் தவிர
வேறெவருமே
ஆசிரியர் இல்லையென்று
நம்பிக்கொண்டிருக்கிற சிலதுகள்
நெளிச்சுக் காட்டுதுகள்.

ஏனென்று கேட்கப் போனால்
அதுகள்
ரீச்சரையே எதிர்த்து வாய் காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு தண்டனை
வழங்குவது குற்றமென்று
அரசாங்கம் வேறு எச்சரித்துள்ளது.

வேண்டாம்.

தன்னைச் சுதாகரித்துக் கொண்ட
வைத்திலிங்கம் ரீச்சர்,

''உதுக்குப் போய் அழுகிறதே.
அவை பழிச்சுக் காட்டினா
நீரும்.
அவையளைப் பழிக்கிறது தானே''
என்று சமாளிக்க முயல,

''நான் அப்படிச் சொல்ல
மாட்டன் ரீச்சர்''

''ஏன்,,?

எங்கட அம்மா சொன்னவா,
வயதுக்கு மூத்தவர்களின்
மனம் நோகக்
கதைக்கக் கூடாதெண்டு.''

ஓ,

பிள்ளைகளை வளர்த்தால்
கண்ணம்மாவைப் போல
வளர்க்க வேண்டும்

எங்கிருந்தாலும்
சுத்தப் பவுணில் எப்போதாவது
துருப்பிடித்திருக்குமா?

இல்லை!

இல்லை!!

ஒருபோதும் இல்லை. O O



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணம்மாவின் குழந்தை — 8

இங்கடகிழமை
கஞ்சிப்பானை கழுவுறது
மணிமேகலையின்ர குழு

கண்ணம்மாவின் மகள்
மணிமேகலையுடன்
வகுப்புத் தோழிகள் சிலரும்
கீழ்வகுப்புப் பிள்ளைகளுக்கு
இலைக்கஞ்சி காய்ச்சிய
பானையுடன் பிளாஸ்ரிக்
குவளைகளையும்
சுத்தமாகக் கழுவி வைத்து விட்டு
சன்மானமாகக் கிடைத்த
ஒவ்வொரு குவளை கஞ்சியுடன்
பாலைமரத்தடி
நிழலுக்குச் சென்றார்கள்.

''எல்லாரும்
சப்பாணி கட்டிக் கொண்டு இருங்கோ,
கையைக் கும்பிடுங்கோ,
நான் சொல்லுறதைச் சொல்லுங்கோ,

''இறைவா''

''இறைவா''

''இது''

''இது''

''நீ தந்த புண்ணியம்''

''நீ தந்த புண்ணியம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உலகில்''

''உலகில்''

''நீ படைத்த''

''நீ படைத்த''

''எல்லா உயிர்களுக்கும்''

''எல்லா உயிர்களுக்கும்''

''இது கிடைக்க''

''இது கிடைக்க''

''நீ அருள வேண்டும்''

''நீ அருள வேண்டும்''
''சரி''
கொஞ்சத்தை எடுத்து வையுங்கோ''
இன்று காலைதான்
''யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி''
என்று
சமய பாட ரீச்சர்
கற்றுக் கொடுத்தாராதலால்
பிள்ளைகள்,
மணிமேகலை'
சொன்னபடியே செய்தார்கள். OO

---

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே

— திருமந்திரம்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணம்மாவின் குழந்தை — 9

தூரத்தில் நான் வருவதைக்
கண்டதும்
ஏதோ சொல்லிச் சொல்லிச்
சிரிக்குது
பார்வதிக் கிழவி.

கிழவி ஏன் சிரிக்குது?

''கொஞ்சம் பொறுங்கோ
கேட்டுச் சொல்லுறன்''

''அவன் பாழ்படுவான்
செல்லடிச்சு
இதொண்டைத் தவிர
மேளின்ர குடும்பத்தை
விட்டோடை
அழிச்சுப் போட்டான்.

இது எனக்குதவியா
இரவு படிக்க வந்தபடியா
தப்பி விட்டுது.
அண்டையிலயிருந்து இது
என்னோட தான்''.

என்று சொல்லிக் கொண்டே
தனது பேத்தியை
எனது பள்ளிக்கூடத்தில்
சேர்த்தவள்தான்
பார்வதிக்கிழவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார்,
கோயிலடியிலிருந்து

கச்சான் விற்றல்,

பொங்கிறவர்கள் குடுத்தால்
பேத்திக்கென்று வாங்குதல்,

யாரேனும் தேங்காய் உடைத்தால்
அதையும் பொறுக்கி
வீட்டுக்குக் கொண்டு போதல்
கிழவியின் தொழில் இவை.

இந்த வருமானத்தில்
பேரப்பிள்ளையைப்
படிபிக்கவேணும்,

இலவசக் கல்வியெண்டு
பெயர் தான். ஆனால்,

, , அம்மம்மா காசு தா,
அம்மம்மா காசு தா,

சோதினைக் காசு கட்டக் காசு தா,

தமிழர் ஆசிரியர சங்க
உண்டியலுக்க போட்டுக்
கொடி வாங்கிக்
குத்தக் காசு தா,
மாதக் காசு கட்டக் காசு தா,

அதுக்குக் காசு தா,
இதுக்குக் காசு தா,
இல்லையெண்டால் பள்ளிக் கூடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக மாட்டன்" 'என்று
அடிக்கடி காசு கேட்டு
கிழவியைப் படாத பாடு
படுத்தி விடுவாள் பேத்தி.

வருங்கால நன்மைக்குத் தானே
என்று
வாயைக் கட்டிவயிற்றைக் கட்டி
பேத்தி கேட்கிற
க செல்லாத்தையும்
கிழவி குடுக்கும்.

''என்ன கம்மம்மா
யாவாரத்துக்குப் போகேலயே? ''

மறுநாள் தமிழ்த்தினப் போட்டியிற்
பங்குபற்றும் சினேகிதி
அன்று பள்ளிக்கூடம் வராத
காரணத்தை அறிய வந்த
மணிமேகலையின்
குரல் கேட்டதும்
குதூகலித்தாள் கிழவி.

மணிமேகலை வந்தால்
சரஸ்வதியே வீடு தேடி
வந்த மாதிரி.

''மாணிக்கப் பிள்ளையார் தான்
ராத்திரி எங்களைக்
காப்பாத்தினது பிள்ளை.

தொடர்ந்து பெய்த மழையினால்
கிழவியின் குடிசைச் சுவரெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்து கிடப்பதைக் கண்ட,
மணிமேகலை,
''மில்லர் குடியிருப்பில,
இருக்கிற மாதிரி
மேல்வீடு கட்டினால்
உடுப்பையும் புத்தகங்களையும்
பத்ரமா வைக்கலாம்''
என்றாள்.

புத்தகங்களும்
உடுப்புகளும்
வெள்ளத்தோடு அள்ளுப்பட்டுப்
போனாலும்
கிழவியின் பேத்தி
கோட்ட மட்டத்தில்
முதலாமிடம் பெற்று விட்டாள்:

''பெஸ்ப்பிறைஸ் மாஸ்ரர்
பெஸ்ப் பிறைஸ்''

ஆனையில ஏறின புழுகம் கிழவிக்கு

அதைச் சொல்லித் தான்,
பிறந்த குழந்தை மாதிரி
முரசைக் காட்டிச்
சிரிக்குது கிழவி.

மற்றவையள் தங்களுக்குப்
பல்லு இருக்குதெண்டு
காட்டிச் சிரிக்கினம்;

கிழவியின் பேத்திக்கு
வெள்ளைச் சட்டை
கொடுத்தது யார்?

கண்ணய்யா மகள்
மணிமேகலை இருக்கப்
பயமேன். ○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணம்மாவின் குழந்தை—10

"கோழி முட்டையிடும்
எடுத்துக்
கடையிற் கொடுத்து விட்டு மத்தியானம்
பாண் வாங்கிச் சாப்பிடுங்கோ"
என்று தன் பிள்ளைகளை
அன்புறுத்திவிட்டு
அதிகாலையிலேயே
ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டாள்
கண்ணம்மா.

கோழிச் சீட்டுப் பிடித்துக்
கிடைத்தவற்றுள்
தற்பொழுது இரண்டு கோழிகள்
முட்டையிட்டு மறுநாள்
தேநீர்ச் செலவுக்கும் சிலவேளை
மத்தியானச் சாப்பாட்டிற்கும்
உதவுகின்றன.

சிறிய கூடுதான் என்றாலும்
மரநாயோ காட்டுப் பூனையோ
நெருங்க முடியாது
பிள்ளைகள் விண்ணாங்குத்தடி வெட்டி
நேர்த்தியாக
அடைத்திருப்பதைக் கண்டு
பலமுறை பாராட்டியிருக்கின்றாள் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவம் அவள்; கோழிக் கூட்டுக்குள்
பாம்பு நுழையும் என்பதை
உணர்ந்திருக்கவில்லை.

கொக் ...கொக்... கொக்
கொக்கக்கோ...
கோழி கொக்கரிக்கும்
பிள்ளைகள் ஓடிச் சென்று
எடுத்து வந்த முட்டையை
ஆமிக்காரன் விட்டிட்டு ஓடிப்போன
பச்சைப் பேணிக்குள் வைத்து
மூடியை இறுக்கி மூடுவர்.

இன்றும் கோழி கொக்கரித்தது
முட்டை எடுத்துக்
கடையிற் கொடுத்து பாண் வாங்கலாமென்ற
''ஆவலாரத்தோடு ஓடிச் சென்ற பிள்ளை
அண்ணா கோழி கொத்திப் போட்டுது
ஓடி வாங்கோ!'' என்று கத்தியது.
ஓடி வந்து இரத்தங் கசியும்
தங்கையின் விரலைச் சூப்பி விட்டு
முட்டை எடுக்கவென
கைவைத்த அண்ணன்
விரல்களிலும் கொத்து விழுந்தது.

''அம்மா ---''
மகன் அழைத்த குரல்
கண்ணம்மாவிற்குக் கேட்கவில்லை
விளக்கேற்றும்
நேரந்தான்
அவள் வீடு திரும்பினாள்.

அதோ,
உடல் முழுவதும்
விசம் பரவி நிறங்கறுத்து
கைகால் விறைத்து-வாயில்
நுரை கக்கியபடி
கண்ணம்மாவின் இரண்டு
ஒளி விளக்குகள்
கோழிக் கூட்டருகே
அணைந்து கிடக்கின்றன.

OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரந்தன் வெளியில்
# ஒரு
# பனை மரம்

விதையாய் என்னை மண்ணில்
போட்டவர் யார்— அவர்
எங்கே போனார்?

எனக்கு யாரும்
நீரூற்றவில்லை
நீரைத் தேடி நான் வேர்விட்டேன்.

மண்ணைப் பிளந்து மேற்கிளம்பிய
என் குருத்துக்களைக்
கட்டாக்காலிகள் தம் வயிற்றுக்கு
மீண்டும் மீண்டும் இரையாக்கிக் கொண்டதால்
பொறுக்க முடியாது நான்
கருக்கு வாள்களைக்
கைகளில் ஏந்திக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் பரந்த இந்த
ஏகப் பெரு வெளியில்
சத்தியத்தைப் போல்-நான்
தலை நிமிர்ந்து நிற்கின்றேன்.

''சத்ஜெயப் பூதம்''
தலைக்கு மேல் பறந்தும் காலடியில் ஊர்ந்தும்
நெஞ்சுக்கு நேரே இடித்தும்
குண்டுகள் கொட்டிய போதும்
வேரறுந்து நான்
வீழ்ந்து படவில்லை

விதையாய் என்னை
மண்ணிற் போட்டவர் யார்?
இன்றவர் எங்கே போனார்?

பனை மரம் தான் என்றாலும்
பலருக்கும் நான் பயனாவேன்:
ஒருபோதும் பிறரைத் தொட்ட
பயனாளி நானாக மாட்டேன்.

நேற்றொரு பெண்
கூலிகளை ஏவி
என் குருத்தோலை வெட்டிப்
பாயிழைத்துக் கொண்டாள்.

மற்றொருத்தியோ
முற்றியதையும் வெட்டி
தன்னைச் சுற்றி வேலி போட்டுக்
கொண்டாள்.

பாயானாலும் வேலியானாலும்
மொட்டையாக்கப் பட்டவன் நான்.
என்றாலும்
மீண்டும் என் தலையிற்
குருத்துக்கள் நீளும்.

என்னால் இயன்றவரை
தாய் நிலத்திற்கு நிழல் தருவேன்.
அதில் இளைப்பாற
மனிதர்கள் வருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளித் தோற்றம் கறுப்பென்று
வெறுத்து அவர் ஒதுக்காதவரை
வெண்பஞ்சு போன்ற உள்ளத்தால்
அரவணைத்து நான் அமுதளிப்பேன்.

அரவணைக்கும் என் இதயத்தில்
வடிகின்ற இரத்தத்தின் அர்த்தம்
புரியாத சிலர் என்னைத் தூற்றுவர்.

என்னில் உரசி என்னில் உரசி
சேற்றில் மிதித்த தம் கால்களைச்
சுத்தமாக்கிக் கொள்வர்.

கட்டாக்காலி நாய்களும்
சுடுகாட்டு நரிகளும்
என்னைப் பார்த்துக் குரைத்தும்
ஊளையிட்டும் ஆனந்தமாய்ப்
பாடி மகிழும்.
ஆனாலும்
என்னிலையில் நான்
தாழ்ந்து போகேன்.

''அடிக்கடி நினைவில் வரும்''
அழகான மரம்'' என்று
என்னைப்பாட
உயர் கவிஞன் இருக்கின்றான்.

தலைக்கு மேல் இடியிடிக்கும்

மின்னல் வெட்டிக் கண்ணைப் பறிக்கும்
என்றாலும்
நான் நிமிர்ந்து நிற்பேன்.
நிமிர்ந்தே நிற்பேன்.

நேராக நிற்பேன்.

நேராகவே நிற்பேன். OO

**கண்ணம்மாவின் மகளுக்குப் பிடித்த எனது கவிதை**

தி. உதயசூரியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணம்மாவின் படைப்புகள்

யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது எழுதியவை

# தருமம்

எனது பெயர் கண்ணம்மா. எனக்கு பதினைந்து வயது. பத்தாம் வகுப்பிற்படிக்கிறேன். குழந்தையாக இருக்கும் போதே அம்மாவை இழந்து விட்ட என்னை ஆச்சிதான் வளர்த்து ஆளாக்கினது அப்பா பல்கலைக்கழகத்தில் பேரா சிரியராக இருக்கின்றார்.

ஒவ்வொரு நாளும் பின்னேரத்தில் தலையை ஆச்சியின் மடியிலே வைத்துக் கொண்டு நான் படுத்திருக்க ஆச்சி என் தலை மயிரைத்தன் விரல்களாற் கோதி வருடிய படியே நல்ல நல்ல கதைகள் சொல்லும்.

நேரங்கிடைக்கும் போதெல்லாம் அப்பா அறிவுரை சொல் லுவார். நாவலர் பெருமான், சேர், பொன், இராம நாதன், ஜீ.ஜீ. பொன்னம்பலம், கார்ள் மாக்ஸ் ஆகியோரைப் பற்றியும் கண்ணகி, மாதவி, மணிமேகலை, சகுனி, துரி யோதனன், பற்றியும் சொல்லுவார்.

யசர், யார், எப்படி, எப்படி நடந்தாலும் நாங்கள் தருமத்தை அறிந்து அதன்படிதான் நடக்க வேண்டும் என்று அறிவுறுத் துவார் அப்பா.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார்மீது அளவுகடந்த நேசம் உள்ளவர் அப்பா, அதனாலேயே எனக்கு கண்ணம்மா என்று பெயர் வைத்தவர்.

தூர இடங்கலிருந்து வந்து கம்பசில படிக்கிற சிலபேர் அப்பாவைக்கேட்டு எங்கட வீட்டில வந்து தங்கியிருக்கிறவை. அவையளுக்கெல்லாம் ஆச்சிதான் சமைச்சுக் குடுக்கும். இரவில் நீண்ட நேரம் வரை அவர்கள் அப்பாவுடன் இருந்து நாட்டு நடப்புக்களைப்பற்றிக் கதைப்பினம். இடையில ஆச்சி தேத்தண்ணி போட்டுத் தரும். நான் கொண்டு போய்க் குடுப்பன்.

ஒருநாள் எங்கடவீட்டிற்கு சற்றுத் தொலைவில் உள்ள கடைக்கு நான் சைக்கிள் ஓடிக்கொண்டு போனேன். கடைக்கு முன்னால் உள்ள மரத்துடன் சைக்கிளைச் சாத்தி விட்டு படிகளில் ஏறி உள்ளே சென்ற போது ஒருவர் கையில் குழந்தையுடன் நின்றபடி,

'' நாங்கள் ஆமிப்பிரச்சினையில மாட்டுப்பட்டுத் தப்பி ஓடி அகதியாக வந்திருக்கிறம் எங்களுக்கு உதவி செய்யுங்கோ'' என்று கடைக்காரரிடம் வேண்டினார். அதைக் கேட்ட கடைக்காரர்

'' சும்மா போப்பா அங்கால'' உங்களுக்குத்தான் நெடுகப் பிரச்சினை'' என்று எரிந்து விழுந்து விட்டு நான் கேட்ட பொருள்களைத் தந்தார். வாங்கிக்கொண்டு நான் படிகளால் இறங்கும் போது,

'' எனக்கு இல்லா விட்டாலும் பரவாயில்லை இந்தக் குழந்தைக்காவது ஏதாவது தாருங்கோ ஐயா'' என்ற குழந்தையுடன் நின்றவரின் வேண்டுதலும் '' போவச் சொன்னா போவப்பா'' என்ற கடைக்காரரின் வக்கிரமான மறுப்பும்; என் செவிகளில் விழுந்தது.

ஏனோ தெரியவில்லை அந்தக் குழந்தைக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்க வேண்டும் போலிருந்தது எனக்கு. என்னிடம் இரண்டு ரூபா தான் மிச்சமாக இருக்கிறது.

இதற்கு என்ன வாங்கலாம்?..

அரை றாத்தல் பாண்,

யேஸ்
அதுதான் நல்லது. குழந்தைக்குப் பாண் வாங்கிக் கொடுக்கும் எண்ணத்துடன் கடையின் படிக்கட்டுகளில் மீண்டும் ஏறினேன் நான் அப்போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படார்.. ர்... ர்...

வீதியால் வந்து கொண்டிருந்த லொறி ஒன்று கண்மூடி முழிப்பதற்குள் கடையின் முன்னால் நின்ற இலுப்பை மரத துடன் மோதுண்டு நின்றது.

மரத்துடன் சாத்தி வைக்கப்பட்டிருந்த எனது சைக்கிள் தூள், தூளாக உடைந்து நசிபட்டுக் கிடந்தது.

அந்தக் குழந்தைக்கு பாண் வாங்கிக் கொடுக்க வேணு மென நான் நினைக்காதிருந்தால்,

பிள்ளையாரே -----,

என் உடம்பெல்லாம் நடுங்கியது ஓடிப்போய் அப்பாவைக் கட்டி அழ வேண்டும் போலிருந்தது எனக்கு,

" தருமம் தலை காக்கும்"
தக்க சமயத்தில் உயிர் காக்கும்"
கூட இருந்தே குழி பறித்தாலும்
கொடுததது காத்து நிற்கும் - செய்த
தருமம் தலைகாக்கும்.

❖❖

கண்ணம்மா படித்த பாடசாலை மலர் ஒன்றில் தருமம் என்ற தலைப்பிட்டு கண்ணம்மா எழுதிய கதை. இதுவே. கண்ணம்மா எழுதிய முதலாவது ஆக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகமும் குயிலும்

ஒரு ஊரிலே ஒரு காகம் வசித்து வந்தது. காகம் இயல்பி லேயே கறுப்பு நிறம் என்பதாலும் ''கா கா'' என்ற அதனது குரலோசை அவலமாக இருப்பதாலும் சிலர் அதனை வெறுத்தனர். தமது வெறுப்பை மற்றவர்களிடமும் சொல்லி அவர்களையும் காகத்தை வெறுக்கச் செய்தனர். இதனால் காகம் எங்கு சென் றாலும் அதை எல்லோரும் கல்லெறிந்து துரத்தினர்.

தனக்கேற்பட்டுள்ள பரிதாபகரமான நிலையினைக் கண்டு மனம் வருந்திய காகம் நன்றாகச் சிந்தித்தது. அதன்படி தன்னை வெறுப்பவர்களிடமிருந்து ஒதுங்கி வாழ்வதென்றும் இனி எக்காரணங் கொண்டும் அவர்களது இலலங்களுக்குச் செல்வ தில்லை என்றும் முடிவெடுத்தது.

இவ்வாறு பிறருக்கு எவ்வித தீங்குமில்லாமல் தானும் தன் பாடுமாகக் காகம் வாழ்ந்து வருவதைக் கண்ட சிலர் காகத்தை புகழ்ந்து பேச ஆரம்பித்து விட்டார்கள்.

காகத்தைப் புகழ்வதைக் காண குயிலுக்குப் பிடிக்கவில்லை. அது காகத்துக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த விரும்பியது.

உடனே அது காகத்தின் கூட்டுக்குச் சென்று காக்கா காக்கா ஊரிலுள்ள எல்லோரும் இப்பொழுது உன்னை பெரிதும் விரும்புகின்றார்கள். இப்பொழுது நீ அங்கு செல்வாயானால் உனக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கும் என்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குக் காகம் ''நீ சொல்வதை நம்பமுடியாது .எனது கறுப்பு நிறத்தைக் கண்டாலே கல்லெடுத்து எறியத் தொடங்கி விடுவார்கள்'' என்று கூறி மறுத்தது.

அதைக்கேட்ட குயில்''நீ இன்னும் பழைய சம்பவத்தை மறக்க வில்லைபோல இருக்கு. இஞ்ச பார் நீ கறுப்பென்றால் நான் மட்டும் என்ன சிவப்பா? நானும் கறுப்புத்தானே நான் போய் மரத்திலிருந்து ''கூ, கூ'' என்றதும் அவர்களும ''கூ, கூ'' என்கிறார்கள். நான் கறுப்பெண்டதுக்காக என்னை அவர்கள் வெறுக்கவில்லை. நான் சொல்வதை நீ நம்பாது விட்டால் நாளை காலையில் போய் ''கா, கா'' என்று சொல்லிப்பார் அவர்களும் உன் சங்கீத வார்த்தைகளைக் கேட்டு 'கா, கா' என்று பாடத் தொடங்கி விடுவார்கள். என்றது குயில்.

குயில் சங்கீதம் என்றதும் காகத்திற்கு ஒரு நப்பாசை வந்து விட்டது. மறுநாள் பொழுது புலரும் போதே காகம் ஒரு வீட் டின் முன்னால் நின்ற தென்னை மரத்தில் இருந்து 'கா, கா' என்று பள்ளி எழுச்சி பாடத்தொடங்கியது. இதுகேட்ட வீட்டுக் காறன் சீ சனியனே விடியற்காலை முழுவியளத்துக்கு வந்திட் டாய் ஓடு என்று கல்லால் எறிந்து விரட்டினான். காகம் அவ மானத்துடன் கூட்டுக்கு திரும்பியது.

அனுபவத்திற் கற்ற பாடத்தை ஒரு போதும் மறந்து விடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணம்மாவின் பதிவுகள் -1

# காண்பதெல்லாம் மறையுமென்றால்,

எங்கள் வீட்டிற் தங்கியிருந்து பல்கலைக்கழகத்திற் படித்துப் பொருளியலிற் சிறப்புப் பட்டம் பெற்ற சிந்தனைச்செல்வி தற்பொழுது விவசாய பீடத்தில் உத்தியோகத்தராக இருக்கின்றார்.

முன்னேறிப்பாய்தல் போல் மேலும் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்று யாழ்ப்பாண நிலமை மோசமடையுமானால் உங்கள் வீட்டிற்கு வருவோம் என்று சிந்தனைச்செல்விக்கு கடிதம் எழுதியிருந்தேன்.

இதற்கான பதில் கிடைப்பதற்கு முன்பே கிளாலிக்கரையில் நாங்கள் படகேறிவிட்டோம்.

இடம்பெயர் மக்கள் நலன்புரி நிலையத்தில் அனுமதி பெற்று சிந்தனைச்செல்வியின் வீடு எங்கே என்று விசாரித்த போது ''உதில பக்கத்தில தான்'' என்று சொன்னார்கள்;

பத்து நிமிடத்திற் சென்றுவிடலாம் என்று நம்பிய சிந்தனைச் செல்வியின் வீட்டை நீண்ட யாத்திரையின் பின்னரே சென்றடைய முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேநீர் தந்துபசரித்த சிந்தனைச்செல்வி' வீட்டின் நடுவே. முற்றம் உள்ள எங்கள் நாற்சார் வீட்டில் நாலுவருடமாகத் தங்கியிருந்த நினைவுகளை மீட்டார்.

மாரிகாலத்தில் அடைமழை பொழியும்போது சதுரவடிவமான முற்றத்தின் படிக்கட்டுகளில் சுற்றிச் சுற்றி வந்து மழைக் காட்சியை ரசிப்பதைப்பற்றிச் சொல்லி மகிழ்ந்தார்.

திருமணமாகி ஐந்து வருடங்களாகியும் தனக்கோர் புத்திர பாக்கியம் கிடைக்கவில்லையே என்று சொல்லிக்கவலைப்பட்ட சிந்தனைச்செல்வி நான்கு வருடமாக தனது பிள்ளை போலவே மதித்து அன்பு காட்டிய எனது தந்தையார் இறந்து விட்டார் என்பதை அறிந்து துக்கப்பட்டதாகவும் தனக்கு ஆண்குழந்தை பிறந்தால் எனது தந்தையாரின் பெயரையே மகனுக்கு வைப்பேனென்றும் கூறினார்.

நான் தனது வீட்டிற்கு வருவதாக எழுதிய கடிதம் கிடைத்ததாகக் கூறிய சிந்தனைச்செல்வி தமது பகுதியில் இடம் பெயர்ந்த மக்கள் பெருந்தொகையாக வந்திருப்பதால் சுகாதாரக் கேடு ஏற்படும். எனவே நலன்புரி நிலைய நிருவாகிகளிடம் கேட்டு அவர்களின் உதவியுடன் முழங்காவில் அல்லது அதை அண்டிய பகுதியில் ஓர் இருப்பிடத்தைத் தேடிக் கொள்ளுமாறு ஆலோசனை கூறினார்.

சிந்தனைச்செல்வியிடம் விடைபெற்றுக்கொண்டு எழுந்த போது இரும்புக்கதிரை என் முழங்கையில் இடித்தது.

உடம்பிலுள்ள அத்தனை நரம்புகளும் அதிர்ந்து உடல் முழுவதும் மின்சாரம் பாய்வது போலிருந்தது எனக்கு.

வலி தாங்கமுடியாது இருந்த போதும் மனவலியால் அடக்கிக் கொண்டு எடுத்தடி வைத்தபோது

போகும் போது வெளிக்கேற்றைக் கொழுவி விட்டுப் போகுமாறு பணித்தார் சிந்தனைச்செல்வி.

வெளிக்கேற்றை இறுக்கமாகச் சாத்திக் கொழுவி விட்டுவரும் போது கண்களில் நிரம்பியிருந்த நீர் கன்னங்களில் வழிந்தது.

வன்னியில் வந்து கண்ணீர் விடுவதன்
காரணம் என்ன?
'பல்கலைக் கழகம் மனிதர்களை உருவாக்கவில்லை.'
என்று சிரித்திரன் சுந்தர் சொன்னது சரிதானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகற் கனவு

'ஆசானாக நானிருந்தால்
அறிவுரைகள் கூறிடுவேன்'

சின்ன வயதில், சின்ன வகுப்பில் என்னுடைய ரீச்சர் எங்களுக்குச் சொல்லித் தந்த பாட்டு இது. இன்று இதே பாட்டை எனது மகளின் ரீச்சர் சொல்லிக்கொடுக்க என்ர செல்லம் அம்மாவுக்குப் பாடிக்காட்டுது.

இது பாட்டு அல்ல, வெறும்
பகற் கனவுகளின் பட்டியல்.

இவற்றைப் பட்டியலிட்டு எழுதியது யாரென்று என்னுடைய ரீச்சரிடம் நான் கேட்கவில்லை – ஒருவேளை அவவுக்கும் அவவுடைய ரீச்சர் சொல்லிக்கொடுத்திருக்கலாம். ரீச்சர் சொல்லித் தரும் பாடல்களைக் கிளிப்பிள்ளைபோல் திருப்பித் திருப்பி நன்றாகப்பாடுவதிலேயே இன்பங் கண்டவர்கள் நாம்.

நான் வளர்ந்து எனது பிள்ளை பள்ளிக்கூடம் போகின்ற காலம் வருவதற்கிடையில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுள்ள போதிலும் பாடலின் ஒரு சொல்லுக்கூட மாறவில்லை. இதனாலேயே இதனைப் பகற் கனவுகளின் தொகுதி என்று சொல்லத் தோன்றுகின்றது.

பாடல் எழுதப்பட்ட காலத்தில் ஆசானாக விரும்பும் பிள்ளை ஆசானாகவும் டாக்டராக விரும்பும் பிள்ளை டாக்டராகவும் சமூகத்தின் ஒத்துழைப்பு இருந்தது. அல்லது சமூகம் அதற்கு இடையூறாக இருக்கவில்லை.

ஒருவரின் வாழ்வில் தன்னுடைய அழிவு இருக்கிறது என்று மற்றவர்கள் அஞ்சிப் பயந்து அவனது காலை இடறி வீழ்த்த முற்படுகின்ற,

தன்னொத்த மாணவன் ஊக்கமாகப் படித்தால் எனக்கு அரசாங்கவேலை கிடைக்காது என்று சக மாணவன் கருதுகின்ற,

ஒரு பெண் தனது கணவனிலும் பார்க்க அயல்வீட்டுக்காரியின் கணவன் ஒரு ரூபாய் தன்னும் அதிகமாகச் சம்பாதித்துவிட்டால் சமூகத்தில் தனது கௌரவம், அந்தஸ்து, புகழ் எல்லாமே கெட்டுவிடும் என்று மனம் எரிந்து புகைகின்ற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சூழலில் பாடலிற் சொல்லப்பட்டவை ஒன்றும் ஒப் பேறாது.

ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள பொறாமை இழைகளி னால் பின்னப்பட்ட விசம் தடவிய வலை போன்ற சமூக அமைப்பிற்சிக்குப்படாது.

காலத்தை மீறிக் கனவு காணாது பிள்ளைகளை வளர்க்கவே நான் விரும்புகின்றேன். அறிவுரைகள் சொல்கின்றேன்.

செம்மணியில் புதையுண்டுபோன மாணவி கிருசாந்தி பிற் காலத்தில் யாரைப்போல், யாராக வர விரும்பியிருப்பாள்?

சோமரத்ன ராஜபக்ஷவிடம்,

அவனது எஜமானர்களிடம்,

மூன்று பக்கம் கடலும் வடக்கே தமிழனும் ஆக்கிரமித்துக் கொண்டு வருகிறார்கள் கால்நீட்டிப் படுக்க முடியவில்லையே என்று சுருண்டுபடுத்த துட்டகைமுனுவின் வாரிசுகளிடம்

கேட்டாற் பதில் சொல்வார்களா?

o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கண்ணம்மாவின் பதிவுகள் - 3

''அம்மா காலை விட்டிலே

ஆக்கித் தந்தா பாற்சோறு

அள்ளி அள்ளிச் சாப்பிட

ஆகா ஆகா நல்ல ருசி''

ஒவ்வொரு வரியாக மகள் இந்தப் பாடலைப் பாடப் பாட என்னுடைய மனதைக் கவ்வியிருந்த இருள் சிறிது சிறிதாக விலகுவதுபோல் இருந்தது எனக்கு.

''யாரம்மா இந்தப்பாட்டைச் சொல்லித் தந்தது''

''புதிசா வந்த சேர்''

''சேருக்கு என்ன பேர்''

''உதயசூரியன்''

உதயசூரியன்...

உதயசூரியன்...

கிடைச்சிட்டியா சூரியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சொல்லித்தந்த பாட்டை எனது பிள்ளைக்கு நீ சொல்லிக் குடுக்கிறியா?

நீ பாடிச்சொல்லிச் சொறித்தது உனது பேராசிரியரின் பேத்தி என்பது உனக்குத் தெரியுமா?

எனக்குத் தெரியும் இது உனக்குத் தெரியாதென்று.

"இது மட்டுமல்ல உனக்குத் தெரியப்படுத்த இன்னும் எத்தனையோ விடயங்கள் உள்ளன. நாளைவரை பொறுத்துக் கொள் நானே உன்னைத் தேடிவாறன்.

வந்தால் இளநீர் தருவியா?

இளநீர்...

ஞாபகமிருக்கா உனக்கு?...

நீ யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் சொன்னதை வன்னியில் உன்னைச்சந்திப்பதற்கு முதல் நாள் ஞாபகப்படுத்துகின்றேன் நான்.

அன்று காலை எனது அப்பாவுடன் இல்லை, இல்லை உனது பேராசிரியருடன் நீ பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்குச் சென்று பொழுது இருட்டும் நேரம் தான் திரும்பி வந்தீர்கள்.

அன்று அன்னை சாரதா தேவியின் பிறந்தநாள் நிகழ்வு அங்கு நடைபெற்றது. அந்த நிகழ்வில் மடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா சொன்ன கருத்துக்களின் ஏற்புடைமை பற்றி இரவு வெகுநேரம்வரை இருந்து இருவரும் பகுப்பாய்வு செய்து விவாதித்தீர்கள்.

அன்றைய யாழ்ப்பாண நிலவரங்கள் குறித்து சுவாமிகள் அதிகம் கதைத்ததாகவும் மா இல்லை, சீனி இல்லை, யாழ்ப் பாணத்திற்கான உணவு கையிருப்பு இல்லை. என்று பத்திரிகைகள் பரபரப்பான செய்திகள் வெளியிடுவது குறித்து சுவாமிகள் கிண்டலாகப் பேசியுள்ளதாகவும் ஏற்கெனவே,

''தமிழா வாடா கமஞ்செய்ய
இல்லையெண்டால் போய்ச் சிங்களவன்ர குண்டியை நக்கு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று யோகர் சுவாமிகள் திருவாய் மலர்ந்துள்ளதை மீள வலியுறுத்திச்சொன்னதன் நியாயப்பாட்டை ஆராய்ந்தீர்கள். இடையிடையே நீ வன்னிக்குப் போவதாக முடிவெடுத்தது குறித்த தனது அதிருப்தியை அப்பா வெளிப்படுத்திலார். எனினும் நீ செல்வதை அவர் தடுக்கவில்லை. இடையே நான் தேநீர் தந்தபோது,

"நீங்கள், வன்னிக்கு வந்தால் நான் இளநீர் தருவேன்" என்று நீ சொன்னாய். அது எப்படி என்று நான் கேட்க,

வன்னியில் தரிசாய்க்கிடக்கும் காணி ஒன்றை ஓய்வு நேரத்திற் திருத்தி அதிற் தென்னம்பிள்ளை வைத்து அது வளர்ந்து காய்க்கும் இளநீரை நான் வரும்போது எனக்குத்தருவேன் என்றாய்.

அது ஞாபகமிருக்கா உனக்கு?

☆ ☆ ☆

திரும்பும் எந்தத் திசையிலும்
என் பாடல்கள் கேட்குமே
விரும்பும் நேயர் வரிசையிலே
குயில்களும் சேருமே
உதிர்ந்து விழும் இலைகளெல்லாம்
என் பாடல்கள் கேட்டபடி
கிளைகளுக்கே திரும்புதடி
அந்த இயற்கையும் வியக்குதடி
பாலை வனங்களில் எந்தன்
பாடல்கள் சோலையடி
மனசுக்கு மனசு பாலங்கள் போட
பாட்டுக்கள் போதுமடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணம்மாவின் பதிவுகள் — 5

# மறைந்ததெல்லாம் காவ்ளபமன்றோ?

மழை நீண்ட நாட்களாக பெய்யாத காரணத்தினால் கிணறுகள் வற்றிவிட்டன. எங்கேயாவது ஓரிடத்தில் இருக்கும் கட்டுக் கிணற்றில் வரிசையில் நின்று குடி நீர் அள்ளி வந்து வாழ்க்கை நடத்துகின்ற போதிலும் குளிப்பதற்கு மற்றும் உடுப்புத் தோய்ப்பதற்கும் வாய்க்காலுக்குப் போவதே அண்மைக்கால வழக்கம். குளத்திலும் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் கணுக்கால் உயரத்திற்கே நீர் வாய்க்காலில் ஓடுகின்றது. தண்ணீர் சுத்தமில்லாது இருக்கின்ற போதிலும் வேறுவழியின்றி அனேக மக்கள் இதனையே குளிப்பதற்கும் தோய்ப்பதற்கும் பயன்படுத்துகின்றார்கள்.

இன்று சனிக்கிழமை பிள்ளைகள் வீட்டில் நின்று கோயில் கட்டி புரட்டாதிச் சனி விரதம் பிடித்து விளையாடுகின்றார்கள். அவர்களைக் குழப்பாமல் விட்டுவிட்டு உடுப்புக்கள் தோய்த்துக் குளிப்பதற்காக வாய்க்காலுக்குப் போனேன். பிள்ளைகள் இரவு சிறுநீர் கழித்து நனைந்திருந்ததால் அவர்களது உடுப்புக்களிலிருந்து வெடுக்கு நாற்றம் வீசியது. நான் பிள்ளைகளைப் பெற்ற தாய் என்பதால் அது எனக்கு அருவருப்பாக இருக்கவில்லை.

வாய்க்காலுக்குக் கிட்டப்போய்க் கொண்டிருந்த போது எதிரே ராசா அண்ணை சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். என்னைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதும் சைக்கிளை விட்டுக் கீழே இறங்கி நின்ற ராசா அண்ணை ''என்ன கண்ணம்மா அக்கா இந்தப்பக்கமாக வாறியள்?'' என்று கேட்டார். ''கிணற்றுக்கை தண்ணியில்லை. அதுதான் வாய்க்காலில்--''

''எங்கட வீட்டை கட்டுக்கிணறு அங்க வந்து நீங்கள் பாவிக்கலாம் அதைவிட்டிட்டு இந்த வெட்ட வெளியில நிண்டு, நீங்கள். பேசாமல் வாங்கோ'' என்று அயலில் இருந்த தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார் ராசாண்ணை. தென்னை மற்றும் மாமரங்கள் நிறைந்த சோலையாகக் காணப்பட்ட ராசா அண்ணையின் வளவு கண்ணுக்கும் மனதுக்கும் குளிர்ச்சியாக இருந்தது. ஆசிரியையான தனது மனைவிக்கு என்னை அறிமுகம் செய்து வைத்த ராசா அண்ணை தனது மகனைக் கூப்பிட்டு இந்த அன்ரி உடுப்புத் தோய்ப்பதற்கு வாத்துவாளி எடுத்துக்குடு அம்மாவுக்கு குடுக்கிற மதிப்பு இந்த அன்ரிக்கும் குடுக்க வேணும் என்று மகனுக்குச் சொல்லிவிட்டு தனது அலுவலுக்குச் சென்று விட்டார் அவர்.

ஏற்கனவே என்னைப்பற்றி அறிந்திருந்த ராசா அண்ணையின் மனைவி தேநீர் போட்டுத்தந்த பின் கிணற்றடிக்குக் கூட்டிச்சென்று நான் உடுப்புத் தோய்க்கும் வரை கூட நின்று உதவி செய்தா. தான் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பயின்ற காலத்தில் நடைபெற்ற ஒரு வாணிவிழாவில் எனது தந்தையார் உரையாற்றியதாகவும் கொல்லமை பற்றி அன்று அவர் சொன்ன கருத்துக்கள் ஆழ்மனதில் பதிந்து விட்டதால் அன்றிலிருந்து தான் மச்சம், மாமிசம் எதுவும் சாப்பிடுவதில்லை என்றும் சொன்னா. அத்துடன் பாடசாலையில் தான் சமய பாடத்தை விரும்பிக் கற்பிப்பதாகவும் சொன்னா.

உடுப்புத் தோய்த்துக் குளித்த பின் நான் எனது வீட்டுக்குப் போக ஆயத்தமான போது ராசா அண்ணையின் மனைவி 'இது உங்கட வீடு மாதிரி நீங்கள் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வந்து குளிக்கலாம்'' என்று சொன்னா. சரியென்று நான் புறப்படத் தயாரான போது ராசா அண்ணையின் மனைவி சிறிய பிளாஸ்ரிக் வாளி நிறைய சோறு, கறி எடுத்து வந்து யாழ்ப்பாணத்தில எண்டால் நாங்கள் தான் உங்களிட்டை கையேந்தி நிற்க வேணும் படிப்பிலும் சரி, மற்ற எந்த விடயத்திலும் சரி ஆனா இண்டைக்கு உங்கடை நிலைமை இப்படியாப் போச்சு இண்டைக்கு நாங்கள் சூழ்நிலைக் கைதிகள் நிச்சயமாக் காலம் சகலரையும் விடுதலை செய்யும். அப்போது உரியவர்கள் உரிய இடத்தில் அமர்த்தப்படுவார்கள். நாங்கள் மரக்கறிதான் சமைச்சனாங்கள். தயவு செய்து வீட்டுக்குக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போங்கோ' என்று சொன்னவர் தான் பெற்ற ஆம்பிளப் பிள்ளையைக் கூப்பிட்டு "அன்ரியோட போய் இதை அவையின்ர வீட்டில குடுத்திட்டு வா" என்று பணித்தார். நாங்கள் நடந்து வரும் போது வெளிக்கேற்று வரை பின் தொடர்ந்து வந்த ராசா அண்ணையின் மனைவி "மழை வரும் போல கிடக்கு நில்லுங்கோ குடை எடுத்துக்கொண்டு வாறன்" என்று சொல்லிவிட்டு ஓடிச் சென்று பெரிய குடையை எடுத்து வந்து மகனிடம் கொடுத்துக்கவனமாகப் போட்டு வரும்படி சொல்லிவிட்டு நாங்கள் வருவதைக்கேற்றடியில் நின்று பார்த்துக் கொண்டே நின்றார்.

சிறிது தூரம் "வந்ததும் மழைத்துளி விழுகுது அன்ரீ குடையை விரிக்கட்டா?" என்று கேட்டதன் ராசா அண்ணையின் மகன். ஆம். மழைத்துளி விழுகிறது என் இதயத்தில்.

O O

நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம்
சொற்பனந் தானோ? பலதோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே! கேட்பதுதே, கருதுவதே நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே நீங்களெல்லாம்
கானலின் நீரோ? - வெறுங் காட்சிப் பிழைதானோ?
போனதெல்லாம் கனவினைப்போற் புதைந்தழிந்தே போனதனால்
நானும் ஓர் கனவோ? - இந்த ஞாலமும் பொய்தானோ?

காலமென்றே ஒரு நினைவுங் காட்சியென்றே பல நினைவும்
கோலமும் பொய்களோ? அங்கு குணங்களும் பொய்களோ
சோலையிலே மரங்களெல்லாம் தோன்றுவதோர் விதையிலென்றால்
சோலை பொய்யாமோ? - இதைச் சொல்லொடு சேர்ப்பாரோ?

காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்ததெல்லாம்
காண்பமன்றோ?
வீண்படுபொய்யிலே - நித்தம் விதி தொடர்ந்திடுமோ?
காண்பதுவே உறுதிகண்டோம் கண்பதல்லால் உறுதியில்லை;
காண்பது சக்தியாம் -
இந்தக்காட்சி நித்தியமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூ மழை பொழிகிறது

"ஒரு சிலையின் காதில் நான் பாட
அது உயிரும் வந்து நடமாட
ஒரு செடியின் காதில் நான் பாட
அதில் ரோசாப் பூக்கள் பூத்தாட
வானவில் வந்தது வசந்தமும் வந்தது
பாட்டுக்கள் கேட்பதற்கு---"

வானவில்-வசந்தம் வந்ததோ இல்லையோ . எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. வவுனியாவிலுள்ள பாடசாலையொன்றல் சங்கீத ஆசிரியையாக என்னை நியமித்திருப்பதாக அந்தக்கடிதம் சொல்கிறது. இதற்காக விண்ணப்பித்து மிகமிக நீண்ட நாட்களுக்குப் பின்னரே நான் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டேன். அத்தேர்வு முடிந்து மிகமிக நீண்ட நாட்களுக்குப் பின்னரே இப்பொழுது நியமனக்கடிதம் வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இன்றைய நிலையில் இந்த வேலை எனக்குத்தேவை யான ஒன்று தான். சின்னவயதில் ''நான் விரும்பும் தொழில்'' என்ற தலைப்பில் கட்டுரை எழுதும்போது சங்கீத ரீச்சர் வேலையையே நான் விரும்புவதாக எழுதியிருந்தேன்.

இறைவன் இசை வடிவானவன். இராவணன் சாமகானம் பாடி இறைவனின் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொண்டான். சாதாரண ஓரறிவு உயிர்கள் முதற்கொண்டு உலகனைத்தையும் படைத்துக்காத்துக் கொண்டிருக்கும் ஆண்டவன் வரை அனைவரும் இசைக்கு வசமாவர்.

இசை ஒழுங்கு நியதிகளுக்குட்பட்டது இசையைக் கற்கின்றவ கள் தமது வாழ்விலும் ஒழுங்காகவே நடந்து கொள்வார்கள். ஒவ்வொருவரும் ஒழுங்கு நியதிக்குட்பட்டு நடக்கின்றபோது அவர் கள் வாழ்கின்ற சமூகத்திலும் ஒழுங்கு நிலவும்.

இவ்வாறெல்லாம் அந்தக்கட்டுரையில் நான்எழுதியிருந்தேன்.

இளமைக்குருதியின் துடிப்பும் பெற்றவரின் பாதுகாப்பும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள் மிகக் குறைவாகவும் இருந்த காலத்தில் நமது எண்ணத்தில் தோன்றுவதெல்லாவற்றை யும் செயலாக்க முடியுமென்றே நம்பினேன்.

ஆனால் இன்று மிக மிக மிக நீண்ட பட்டறிவின் பின் எம் மால் எதையாவது சாதித்துவிட முடியுமா? - நிவாரண அட்டை தவிர்ந்த வேறு எங்காவது நமது பெயரைப் பொறித்துவிட முடி யுமா? என்று சிந்திக்கின்றபோது ஆம், என்று எடுத்த எடுப்பில் சொல்லிவிட முடியவில்லை.

மாமேதை கார்ள்மார்க்ஸ் ''ஓர் இளைஞன் ஏதேனும் ஒரு தொழிலிற் பிரவேசிப்பதற்கு முந்தி அவன் மனதில் உதிக்கும் எண்ணங்கள்'' என்ற கட்டுரையில்,

''நாம் எந்தத் தொழிலுக்குத் தகுதியுடையவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோமோ அந்தத் தொழிலில் நாம் அநேகமாகப் பிரவேசிக்க முடியாமல் இருக்கலாம். ஏனென்றால் எமக்கும் சமுதாயத்திற்கும் எந்தவிதமான சம்பந்தம் இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்று நாம் நிர்ணயிப்பதற்கு முந்தியே அந்தச் சம்பந்தம் உருவாக்கப்பட்டு விட்டிருக்கின்றது'' என்று கூறுகின்றார். எனது கடந்தகால அனுபவங்களும் நான் கேள்விப்பட்ட சம்பவங்களும் இக் கருத்தைச் சரியென்றே மெய்ப்பிக்கின்றன.

நம்மவர்கள் பழமொழியாக ஒன்று சொல்வார்கள். ''தெய்வம் விடைகொடுத்தாலும் பூசாரி விடமாட்டான்'' என்று. இந்தப் பூசாரி மாதிரியே தற்கால அதிகாரிமார் பலரும் இருப்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இத்தகைய புறநிலையிற்றான் எனக்கோர் உத்தியோகம் கிடைத்துள்ளது. புறச்சூழல் எப்படியிருந்த போதிலும் இந்த உத்தியோகம் எனக்குப் பிடித்தமானதொன்று. சின்ன வயதிலிருந்தே இதை நான் விரும்பியிருந்தேன்.

பொதுவாக மானுட சமுதாயத்திற்கு நன்மை தரக்கூடிய ஒரு தொழிலை நாம் தெரிந்தெடுத்துக்கொண்டு விடுவோமானால் உலக வாழ்க்கை நமக்கொரு சுமையாய் இராது.

''எவனொருவன் பெரும் பாலானோருக்குச் சந்தோசத்தை உண்டு பண்ணுகிறானோ அவன்தான் அதிக சந்தோசத்தை அடைகின்றான்'' என்பதையே சமயம் நமக்குப் போதிக்கின்றது.

இந்தத் தொழிலில் நான் அதிக சந்தோசத்தை அடைவேன். என்னை விட்டுப் பிரிந்த எனது பிள்ளைகள் ஒன்றுக்குப் பத்தாகி என்னிடம் வந்ததாக எண்ணி மகிழ்வேன்.

☆

''வாசல் தேடி வந்ததடி
    சொர்க்கமே சொர்க்கமே
வானம் கூடத் தொட்டுவிடும்
    தூரமே தூரமே
கனவுகளின் பெயரெழுதி
    ஒரு தேவதை வாங்கிச் சென்றாள்.
நிமிடத்திற்கு ஒன்று என அந்தக்
    கனவுகள் பலிக்க வைத்தாள்.
கோயில் மணிகளே என்னை
    வாழ்த்திட ஒலி கொடுங்கள்
இன்னிசை ராச்சியம் என வசமானது
    பூமழை பொழிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணம்மா வவுனியா நகரிலிருந்து எழுதியவை.

## கடிதம் — 1

வயிரவர் புளியங்குளம்,
வவுனியா,
7. 11. 2001.

''அன்பும் சிவமும் இரண்டு
என்பர் அறிவிலார்''

அன்புள்ள உதயசூரியன், நானும் மணிமேகலையும் இங்கு சௌக்கியமாக இருக்கின்றோம். உனது சௌக்கியத்திற்கும் அன்னை பராசக்தியின் அருளை வேண்டுகிறோம், 27. 10. 2001 அன்று எழுதிய உனது கடிதம் கிடைக்கப்பெற்றேன்: உவ்விடம் வருவோரை எதிர்பார்த்து பதில் எழுதுவதைத் தாமதித்தேன்.

''உலகம் ஒரு பள்ளிக்கூடம். நாங்கள் பாடம் படிக்க வந்திருக்கின்றோம்'' என்று யோகர் சுவாமிகள் சொல்வாராம் (நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்று பாரதிதாசன் பாடியதற்குமுன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனுஜர் தனக்கு ஐந்து ஆசிரியர்கள் உண்டென் பாராம். எழுத்தாளர் பி. ஸ்ரீ. யும் அதனைத் தம் விடய மாகக் குறிப்பிடுவார். அளவெட்டியில் இருந்த இரத்தின சபாபதி உபாத்தியாயர் உமக்கு யார் குரு என்று கேட்டால் ''அனுபவம் தான் என் குரு'' என்பாராம். ஆகவே இங்கு படிப்பதற்கு வசதி குறைவு. புத்தகம் அனுப்பு என்று நீ எழுதியதில் நியாயம் இல்லை.

இயற்கை (மரம், விலங்கு, பறவை) அயல் மனிதர்களை அவ தானிப்பதில் அநேக பாடம் படிக்கலாம். இயற்கையோடு ஒன் றித்து மனம் நிம்மதி காண முயலும்போது பல பாடங்களை மனம் சிந்தித்துத் தெளியும். ஜே. கிருஷ்ணமூர்த்தி, ஆனந்தக் குமார சாமி போன்றவர்கள் இதனையே வற்புறுத்தியுள்ளனர். ஜே கே. புத்தகத்தில் மூழ்குவது ஒரு வியாதி, அபின் பழக்கம் என்று. நையாண்டி செய்வார். நானும் புத்தகப் பூச்சி வர்க்கம் தான். எனினும் புத்தகம் இல்லாத இடத்துச் சமாளிக்க மனம் பிரார்த் தனையில் ஈடுபடும் நிலை வந்துள்ளது.

பார்த்தன் கீதையில் கூறினான் ''நான் சத்திரியன் போர் எனக்கு விளையாட்டு. அது அச்சம் தருவதில்லை போரின் விளைவுகளைக் குறித்து மட்டுமே அஞ்சுகிறேன்'' என்று போரில் ஈடு படுவோர் தர்மத்தின் வழி நின்றால் சாதாரண மக்கள் பாதிப்பது குறையலாம். மிலேச்சத்தனமான ஐரோப்பாவில் விமானம் போன்ற நவீன தொழில் நுட்பசாதனங்கள் போருக்கு உபயோகிக்கப்பட்ட நாள் முதலே குடிமக்களைக் குறி வைத்துத் தாக்கும் அக்கிரமம் அதிகரித்தது. அது இன்று விடுதலைப் போராட்டங்களை அடக்க முற்படும் அரசாங் கங்களுக்கு ஆயுதம் வழங்கிப் பணம் தேடும் பண்பாடாக வளர்ச்சி கண்டு, ஒசாமா பின்லாடன் விடயத்தில் வேறொரு புதிய பரி ணாமம் பெறுகின்றது இவற்றைப் பாவம் என்று கருதும் மக் களின் மனச்சாட்சியைத் திருப்திப்படுத்தவே செஞ்சிலுவைச் சங்கம் முதலிய என். ஜீ. ஓக்கள் தொண்டு செய்கின்றன.

அந்த மேல்நாட்டுக் கலாசாரமும் கல்வியும் தான் எமக்கு வழி காட்டுகிறது. இனங்களின் தனித்துவ அடையாளங்களையும் தேசி யக் கட்டமைப்பையும் சிதைத்துச் சீரழித்து விடும் நோக்கம் கொண்டது அது.

**புதிய கல்விச் சீர்திருத்தம்**

**மாணவர் மையக்கல்வி**

**உலக வங்கியின் உதவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக்காரன் வந்து எமது பள்ளிக்கூடங்களை இரகசியமாகப் போட்டோ எடுத்துத் திருட்டுத்தனமாகக் கொண்டு போகிறான். என்றெல்லாம் சிலர் சொல்லும்போது நெஞ்சு பொறுக்குதில்லை.

கல்வி நிலை இவ்வாறிருக்க தமிழ்ப்பண்பாடு என்று வாய்ப் பேச்சு பேசுவதெல்லாம் வெறும் புலுடா. அநேகமாக ஒவ்வொரு தமிழனும் நிறங்கறுத்த ஆங்கிலேயனாக இருக்கவே ஆசைப்படுகின்றான்.

இத்தகைய டமிங்கிலன் இருப்பதிலும் இறப்பதே மேல் வேலியே பயிரை மேயும் போது காட்டுப்பன்றி வந்து வயலை அழிக்கிறது என்று ஏசிப் பயன் என்ன?

வாழும் இலக்கியம் எது? எம்மை வாழ்விக்கும் இலக்கியம் எது? இந்த அடிப்படையைத் தீர்மானிதாலேயே எதைத் தேர்ந்தெடுத்துப் படிப்பது என்ற முடிவு கிடைக்கும்.

வீசும் காற்றுடன் அள்ளுப்பட்டுப் போகாது காலூன்றி நின்று பேசக்கூடிய படைப்புக்களை உலகின் முன்வைக்க வேண்டும் என்பதில் அவதானம் வேண்டும்.

எமது காலம் இப்படியிருந்தது. என்று எதிர்காலத்தவர் படிப்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் வசதி தேடிவைக்கும் படைப்புக்களும் படைப்பாளிகளும் இக்காலத்திலேயே காணாமற் போய் விடுகிறார்கள். வருங்காலத்தாலும் இவர்கள் தேடப்பட மாட்டார்கள்.

எமது காலத்தில் இப்படியும் நடக்கிறது என்பதை எமது காலத்தவரே படிப்பதற்கென்று எழுதும் படைப்பாளிகளே எக்காலத்திலும் நின்று நிலைப்பர்.

கம்பனும் வள்ளுவரும் இளங்கோவடிகளுடன் பாரதியும் தமது காலத்தவர்க்கென்றே எழுதினர். அதனாலேயே அவர்கள் சாகா வரம் பெற்றார்கள்!

''ஆங்காரம் தவிர் நெஞ்சே''
அப்பர்

அன்புடன்,
கண்ணம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணம்மாவின் பதிவுகள் • 6

"பாட்டுக் கச்சேரி எங்கள்
பாட்டுக் கச்சேரி
கேட்க வாருங்கள் நன்றாய்க்
கேட்க வாருங்கள்"

போட்டி நிகழ்ச்சியொன்றில் குழுவாகப் பாடுவதற்கு இந்தப் பாடலைச் சொல்லித் தருமாறு பிள்ளைகள் கேட்கிறார்கள். இந்தக் கச்சேரியும் நாங்கள் முன்னர் செய்த கச்சேரிதான். ஒரு தலைமுறை காலம் ஓடிவிட்ட பின்னரும் இந்தப்பாடலும் அதன் பொருளும் நமது கல்வி உலகை விட்டு முற்றாக ஓடவில்லை.

சாதாரணமாக நாம் ஒரு தலைமுறை என்று சொல்வதற்கும் கணணி உலகில் தலைமுறை என்று சொல்வதற்கும் வித்தியாசம் உள்ளது. அறிவியலின் அனைத்துத் திறன்களையும் உள்ளடக்கி உலகம் இதுவரை நான்கு தலைமுறைக் கம்பியூட்டர்களை கண்டுள்ளது. அதற்கு மேலும் அது தனது புத்தியைத் தீட்டிக் கூர்மைப்படுத்திக்கொண்டிருக்கிறது. உலக நடப்பு இவ்வாறிருக்க.

மொட்டைக் கத்தியிலே முகர்சிங்
வாசிக்கும் முரளியையும்
அகப்பைக் காம்பிலே வயலின்
வாசிக்கும் அகிலாவையும்

பிள்ளைகளாக விரும்பிக்கேட்டாலும் சரி. அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்குமாறு பணிக்கப்பட்டாலும் சரி மொட்டைக் கத்தியையும், அகப்பைக்காம்பையும் பிள்ளைகளது புத்தியிலே திணிக்க நான் சம்மதிக்க மாட்டேன். இத்திமிர்ந்த ஞானச் செருக்கு என்னிடமிருப்பதால் தங்களுக்குப் பிடிக்காத – தங்களோடு ஒத்தூதாத ஆசிரியையாகப் பலரும் என்னைப் பார்க்கிறார்கள். ○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணம்மாவின் பதிவுகள் – 7

அண்மையில் அரச வைத்தியசாலைக்குச் சென்றிருந்த பொழுது அழகான விளக்கப்படங்களுடன் அச்சிடப்பட்ட தனிநபர் சுகாதாரம் சம்பந்தமான சுவரொட்டிகள் வெளி நோயாளர் சிகிச்சைப்பிரிவுச் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்தன.

மலேரியா, வாந்திபேதி, டெங்குக் காய்ச்சல், முதலிய தொற்று நோய்களிலிருந்து மக்கள் தம்மைத் தாமே பாது காத்துக்கொள்வதற்கான அறிவுரைகள் பெருபாலும் அவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன. அரசாங்கத்தினாலும், தொண்டு நிறுவனங்களினாலும் இவை வெளியிடப் பட்டிருந்தன.

இவைதவிர செயற்றிட்டம் என்ற பெயரில் க. பொ. த உயர்தர வகுப்பு மாணவர்களால் அச்சிடப்பட்ட பிரசுரங்களும் ஆங்காங்கே பல இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்தன. இவற்றின் உள்ளடக்கமும் நோய்த்தடுப்பு பற்றியதாகவே இருந்தன.

மருந்திற்காக வெளிநோயாளர் பிரிவிற்காத்துநின்று ஒருவர் இவ்விருவகைப் பிரசுரங்களையும் வாசித்துப்பார்த்து விட்டு

" ரண்டிலும் ஒரே விசயம் தான் வித்தியாசம் ஒண்டு மில்லை"

பெரிய நோட்டீசில இருக்கிறதைப்பார்த்து சின்ன நோட்டீசில எழுதிறதுக்கு பெயர்தான் செயற்திட்டமோ?

அதற்கு ஏ, எல். படிக்கனோணுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை மேற்பார்வை செய்ய உயர்மட்டக்குழு தேவையோ?

''நீங்களும் ஒரு ரீச்சர் தானே சொல்லுங்கோ பாப்பம்'' என்று அடுக்கடுக்காகக் கேட்டார். அங்கிருந்தவர்கள் தமது நோயையும் மறந்து என்னைப் பார்த்து கொல்லென்று சிரித்தனர்.

எனக்கருகே நின்ற மற்றொருவர் '' ஐயா சொல்லுவது சரிதான் என்னுடைய மகளும் ஏ. எல் தான் படிக்கிறாள் ''செத்தல் மிளகாயில் சம்பல் இடிப்பது எப்படி'' என்று ஆய்வு செய்து கட்டுரை எழுதுகிறாள் ஆனா, ஆவன்னாவே தெரியாத என்ர மனிசி மகளைவிட நல்லாவே சம்பல் இடிக்கும். என்று சொல்லிப் பல்லைக்காட்டிச் சிரித்தார். அவரது வாயில் அடைந்து கிடந்து வெளிக்கிளம்பிய சுருட்டுப்புகையின் நெடி எனக்கு அருவருப்பாக இருந்தது.

---- ❀ ❀ ❀ ----

## கண்ணம்மாவின் பதிவுகள் - 8

நான் எழுதிய விடயமொன்றைத் தட்டச்சுச் செய்யக் கொண்டு போனபோது, தட்டச்சுச் செய்யிற பிள்ளை. இந்தியாவிலிருந்து வெளியாகும் மருத்துவ மாத இதழொன்றில் வெளிவந்துள்ள ''வெள்ளைப் பூண்டின் மருத்துவக் குணங்கள்'' என்ற கட்டுரையைப் பார்த்துத் தட்டச்சுச் செய்து கொண்டிருந்தா, அது ஏனென்று தான் கேட்க யாரோ ஒரு ஏ. எல், படிக்கிற பிள்ளை செய்திட்டம் சமர்ப்பிப்பதற்காக அதைத் தட்டச்சுச் செய்வதாகச் சொன்னா?

இனிமேல் வருத்தமென்டாலும் நான் வைத்தியசாலைக்குப் போக மாட்டேன், (நல்ல மாட்டுக்கு ஒரு சூடு). போதும் என்றால், இன்னொரு சுருட்டுப் புகைக்காரனின் வாய் நாற்றம் எனக்குத் தேவையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதம்-2

வயிரவர் புளியங்குளம்,
வவுனியா.
திருவள்ளுவராண்டு 2033,
தை மாதம் 01 ஆந் திகதி

அன்புள்ள உதயசூரியன்.

மகளும் நானும் இங்கு சௌக்கியமாக இருக்கின்றோம். நீயும் சகல சௌபாக்கியத்துடன் நலமேயிருக்க அன்னை பராசக்தியின் அருளை வேண்டுகின்றேன்.

இன்று தைப்பொங்கல் திருநாள்.

காலை வீட்டிற் பொங்கல் முடித்துக்கொண்டு மத்தியானம் கோயிலுக்குப்போய் வந்து இதனை எழுதுகின்றேன். இத்துடன் உனது நூலுக்கான அணிந்துரை அனுப்புகின்றேன்.

''ஆயிர முகத்தா னகன்ற தாயினும்

பாயிர மில்லது பனுவ லன்றே''

என்ற தமிழிலக்கணம் ஒருநூலுக்கு அணிந்துரை இன்றியமையாதென்பதை உணர்த்துகின்றது.

யார், யார் அணிந்துரை வழங்கலா மெனில்,

''தன் ஆசிரியன் தன்னொடு கற்றோன்
தன் மாணாக்கன் தகுமுரை காரனென்
றின்னோர் பாயிரமியம்புதல் கடனே''

என்றது மேலும் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நால்வருள்ளும் அடங்காத எனது உரை உனது நூலை அணி செய்யுமா? எனவே இதை அன்புரை என்று வைத்துக் கொள்.

மணிமேகலை ஊக்கமாகப் படிக்கிது. பள்ளிக்கூடத்தில் எல்லா ரீச்சர்மாரும் நல்லவாரப்பாடு. 'கன்றின் குரல்' என்று ஒரு நிகழ்ச்சியை தொடராக ஒவ்வொரு வெள்ளிகிழமையும் செய்யுது. தன்னுடைய தாய்ப் பசுவை மனிதர் இறைச்சிக்காக கொலை செய்ததைபபற்றி இளம்பிள்ளைகளிடம் முறையிட்டு நீதி கேட்பதாக கன்றின் குரல் நிகழ்ச்சி அமைந்துள்ளது. நான் தான் பிரதி எழுதிக் கொடுக்கிறனான். நல்ல நிகழ்ச்சியென்று ரீச்சர்மார் பாராட்டுகிறவை' முதல் நாள் சொன்ன கன்றின் குரலை இத்துடன் அனுப்புகிறேன். இதுவும் உனது நூலில் வரவேண்டுமென்பது மணிமேகலையின் விருப்பம்.

அணிந்துரை கேட்டு நீ எழுதிய கடிதத்திலே, மதுரைக் காமராஜர் பல்கலைக்கழக தொலைக்கல்வி நிலையத்தில் ஒரு எம். ஏ. செய்யலாமா என்று ஆலோசனை கேட்டிருக்கிறாய். அதைப் படித்தபோது, ''படித்தது போதும்'' என்று யோகர் சுவாமிகள் சொன்னது. தான் ஞாபகத்திற்கு வந்தது.

படி, படி என்றுன்னை ஊக்கப்படுத்திய நானே இப்படி எழுதுகின்றேன் என்று எண்ணாதே, நமது சமகாலம் இப்படித்தான் சொல்ல வைக்கிறது.

இதுவரை படித்ததை வைத்து நீ சாதித்தது என்ன?

சாதிக்கத்தான் வேண்டாம். கற்ற கல்வி எல்லோரையும் போல் வாழ்வதற்கேனும் வழி வகுத்ததா?

உவ்விடத்தில் முதன் முதலாக நான் உன்னிடம் வந்தபோது

''மாந்தர் பால் பொருளைப்போக்கிப் பயின்ற தாம்
மடமைக் கல்வியால் மண்ணும் பயனில்லை
எந்த மார்க்கமும் தோற்றில தென் செய்கேன்?

என்ற பாரதியின் வரிகளைச் சொல்லி அழுதவன் தானே நீ மறந்து விட்டாயா?

[illegible] தொடர்பு கொள்ளவில்லையா? என்று நான் கேட்டபோது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அஞ்சு வருசமா யாழ்ப்பாணத்தில் கடிதம் தட்டச்சுச்செய்த காசை உண்டியலுக்குள் போட்டு வைத்திருந்தால் அஞ்சு தங்கப் பவுண் நகை வாங்கி மிச்சக் காசும் வரும் என்றாயே,

அதையும் மறந்து விட்டாயா?

என்ன செய்ய? எமது காலம் இப்படித்தான் இருக் றது இதில் மாறுதல் வரும் வரை இன்னும் எத்தனையோ? தங்கப் பவுண் பெறுமதியான பணத்தையும் சொத்துக்களையும் நேரத்தை யும் வீணாக இழக்க வேண்டித்தான் நேரிடும்.

தொழுது பின்சென்று, பொய் சொல்லிச் சீவிப்பதாயின் அதற்குப் படிப்புத் தேவையில்லை.

உண்மை சொல்லி வதைபடுவதாயின் கற்ற கல்வியாற் பய னில்லை.

இத்தகையதொரு சூழ் நிலையிற் கற்றதாற்தான் பாரதி பட்டினி யால் வாட நேர்ந்தது. நடிப்புச் சுதேசிகள் அவனைக் கணக்கி லெடுக்காது விட்டனர்.

இதேவேளை பிரான்ஸ் நாட்டவரும் பிறரும் பாரதியின் கவிதைகளைத் தத்தமது பாசையில் மொழிபெயர்த்துப் போற்றி னர்: இதனைப் பாரதியே,

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது
சொற் புதிது சோதி மிக்க
நவ கவிதை எந்நாளும் அழியாத
மாகவிதை என்று நன்கு"

பிரான்ஸ் என்னும் சிறந்த புகழ் நாட்டில் - உயர்
புலவோரும் பிறரும் ஆங்கே
விராவு புகழ் ஆங்கிலத்தீங் கவியரசர்
பராவி எந்தன் தமிழ்க் கவியை மொழிபெயர்த்துப்
போற்றுகின்றார்... என்று சொல்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் சொல்கிறேன் எமக்கான சுதந்திரம் கிடைக்காத வரை கற்ற கல்வியின் பெறுமதி உணரப்பட மாட்டாதென்று.

1948 இல் இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றது. ஆயினும் நாட்டின் ஆட்சியாளர் தமது – எமது கல்வியை உலக வங்கியில் அடைவு வைத்து விட்டனர்;

கடுமையாக உழைத்து அடைவு நகையை மீட்பதுபோல அதை நாம் மீளப்பெறவேண்டும்; அப்போது தான் எமது கல்வி எமக்கு வழிகாட்டும்.

''இதுவரை தத்துவஞானிகள் உலகத்தைப் பல்வேறு வழிகளில் வெறுமனே வியாக்கியானப் படுத்தித்தான் வந்திருக்கிறார்கள்; ஆனால் அதை மாற்றுவது தான் தற்போதுள்ள விடயமாகும்.''

(1845 வசந்த காலத்தில் மார்க்ஸ் எழுதியது)

அன்புடன்,
கண்ணம்மா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயசூரியன்

அக்கினிக் குஞ்சொன்றைத் தன்னகத்தே கொண்டவன் அது அவனைக் கவிஞனாக இனங்காட்டியுள்ளது. இலக்கணம் மீறிய கவிதைகள் என எவரும் அவன் கவிதைகளைக் கூறலாம். ஆனால் இலக்குத் தவறாத கவிதைகள் அவை. போலித்தனமற்ற ஒரு ஆத்மாவின் இயல்பான உணர்வுப் பொறிகளாக இந்த நூலில் வெளிப் பட்டுள்ளன.

வார்த்தை ஜாலங்களுள் அவன் தன்னை மறைக்க முயலவில்லை. ஒரு படைப்பாளிக்கு வேண்டிய இந்த முக்கிய இயல்பு அவனிடம் உள்ளது. எல்லாவற்றையும் மீறிய 'மனிதம்' அவன் கவிதைகளின் தொனிப்பொருளாகியுள்ளது. அதுவே அவனைக் கவிஞனாகவும் அடையாள மிட்டுள்ளது.

கவிதையையும் கவிஞனையும் காலம் தான் மதிப்பீடு செய்யும். வரையறை செய்து கொண்டு வாய்ப் பந்தலிடும் தனி மனிதர்களல்ல...

இது உதயசூரியனுக்கும் அவன் கவிதைகளுக்கும் கூட பொருந்தும்.

நம்பிக்கையின்மைகளின் அழுத் தங்களுக்கிடையே நம்பிக்கையுடன் தன்னை இந்த நூல் மூலம் இனம் காட்ட முனைந்துள்ளான்.

இந்தத்துணிச்சல் அவனது எதிர் கால வெற்றிகளுக்கு வளமூட்டட்டும்.

வாழ்த்துக்களுடன்
ராதேயன்

புதுக்குடியிருப்பு.

0777 955642 உதயசூரியன் Sir.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org